வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 15.09.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 278 | பக்கங்கள் : 12




## ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டுக்கள்

# சுயாதீன விசாரணை ஊடாக குற்றவாளிகளுக்கு தண்டனை

## உறுதிபடக் கூறினார் ஜனாதிபதி ரணில்



**கொழும்பு, செப்ரெம்பர்15**

**“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இங்கு இரண்டு வழிகளில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. அந்த விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றேன். விசாரணைகளின் முடிவின் பிரகாரம் குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்கள் தப்பிக்க முடியாது.” - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அதற்கு முன்பாக ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரை அவர் சந்தித்து உரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும்

11

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணியை பார்வையிட்ட மாவை



*முல்லைத்தீவு, செப். 15*

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்று எட்டாவது நாளாக இடம்பெற்றன.

இந்நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்ட குழுவினர் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நடைபெறும் பகுதிக்கு வருகை தந்து அகழ்வுப் பணிகளை பார்வையிட்டனர்.

(அ)

## சுற்றிவளைப்புக்கு சென்ற பொலிஸ் அதிகாரி மாயம்!

### *கிளிநொச்சியில் பரபரப்பு*

*கிளிநொச்சி, செப். 15*

கிளிநொச்சி - மலையாளபுரம் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடுபவர்களை சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மலையாளபுரம் - புது ஐயங்கன்குள பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி நடைபெறுவதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, நேற்று காலை 6.30 மணியளவில் கிளிநொச்சி

11

### *ராஜீவ் காந்தி கொலை வழக்கு;*

## முருகன், சாந்தன் உட்பட நால்வரை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை!

*புதுடில்லி, செப். 15*

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன் உள்ளிட்ட நால்வரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், உரிய பயண ஆவணங்கள் கிடைத்தவுடன் நால்வரும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும், இலங்கையை சேர்ந்த முருகன், தற்போது திருச்சியிலுள்ள அகதிகள் முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில், தன்னுடைய கணவரை அகதிகள் முகாமிலிருந்து விடுவித்து தன்னுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கக் கோரி, அவரின் மனைவி நளினி

11

## வல்லிபுர ஆழ்வார் உற்சவம் ஆரம்பம்



*வடமராட்சி, செப். 15*

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம்பெற்றது. ஆலய பிரதம குரு கணபதீஸ்வர குருக்கள் தலைமையில்

11

## சர்வதேச நாணய நிதிய மீளாய்வு நேற்று ஆரம்பம்

*கொழும்பு, செப். 15*

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணையை விடுவிப்பதற்கு முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் மீளாய்வு நேற்று ஆரம்பமானது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்து இந்த மீளாய்வை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதி நான்கு தவணைகளாக இலங்கைக்கு வழங்கப் படவுள்ளது.

11

## நல்லூர் ஆலய காளை முட்டி பணியாளர் ஒருவர் மரணம்!

*யாழ்ப்பாணம், செப். 15*

நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயத்தின் நந்தவனப் பகுதியில் பணியாற்றும் ஒருவர் காளை மாடு முட்டி உயிரிழந்தார்.

இருபாலையைச் சேர்ந்த நித்தியசிங்கம் (வயது-60) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று வியாழக் கிழமை மாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

காளை மாட்டுக்கு உணவு வைக்கச் சென்றவேளை மாடு முட்டி காயமுற்றவர் வீழ்ந்து கிடந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(அ)

## ரணிலின் இரட்டைப் பேச்சு சவாலுக்கு உள்ளாகியுள்ளது

*கொழும்பு, செப். 15*

“இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மனித உயிர்களை இழந்த, நான்கு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு படுகொலைகள் பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை சனல் 4 ஆவணப் படம் வெளிப்படுத்திய பின்னர் ஜனாதிபதியும் அவரது அமைச்சும் கூறும் முரண்பாடான கருத்துகள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.”

-இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது, இந்த தகவல்

11

## சிறைச்சாலைகளில் பரவும் அம்மைநோய்!

*கொழும்பு, செப். 15*

சிறைச்சாலைகளில் தற்போது பரவி வரும் அம்மை நோயை விரைவாகக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் மிக மோசமான நிலைமை ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சு சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

எனவே, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் கைதிகளுக்கு

11

## இப்படியும் நடக்கிறது

அவுஸ்திரேலியாவில் வாழும் பழங்குடியின மக்கள் அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

அதுவரை அந்த மக்கள், அவுஸ்திரேலியர்கள் தமது அரசியலமைப்பின் மூலம் அனுபவிக்கின்ற எந்த உரிமைகளையும் அனுபவிக் கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இவர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்குவது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்தும், அவுஸ்திரேலியா பழங்குடி யினர் உரிமைகள் மீதான வரலாற்று சிறப்புமிக்க அந்த வாக்கெடுப்பு வெற்றி பெற்றால், பழங்குடியினர் அவுஸ்திரேலிய அரசியல மைப்பால் முழுமையாக அங்கீகரிக்கப்படுவார்கள்.

மேலும், இவர்களுக்கு சட்டப்பேரவையில் ஆலோசனை வழங்க நிரந்தர பிரதிநிதி உருவாக்கப்படவுள் ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த திட்டம் அவுஸ்திரேலியாவில் பரபரப்பாக பேசப்படும் தலைப்பாக இருப்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த அவுஸ்திரேலியாவின் பழங்குடியின மக்கள் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்த வாக்கெடுப்பு குறித்து பேசியுள்ள அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், ‘பாராளுமன்றங்கள் சட்டங்களை இயற்றுகின்றன. ஆனால் மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார் கள். இது உங்கள் நேரம், உங்கள் வாய்ப்பு, சரித்திரம் படைப்பதில் ஒரு பகுதியாக இருப்பதற்கான வாய்ப்பு. இப்போது, அவுஸ்திரேலிய மக்களுக்கு நல்லிணக்கத்திற்கு ‘ஆம்’ என்றும், ‘முதல் பூர்வீக மக்களுக்கான’ அங்கீகாரத்திற்கு ‘ஆம்’ என்றும் சொல்ல வாய்ப்பு கிடைக்கும்’ என்று தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் பிரதமர் இந்த மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள் ளதுடன், தனது ஆதரவையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்தச் செய்திகளை படிக்கின்றபோது அவரைப்போன்ற தலைவர்கள் நமது நாட்டில் இன்னமும் இல்லாமல் இருப்பது ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

அதுவல்ல நாம் இன்று இந்தப் பத்தியில் சொல்ல வருவது.

இந்த வாக்கெடுப்பு தொடர்பாக இலங்கை சிவசேனை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றே இந்த ஊர்க்குருவியின் கவனத்தைப் பெற்றது.

‘ஆஸ்திரேலியாவின் ஆறு மாநிலங்களிலும் தலைநகர் பிரதேசத்திலும் வாழ்கின்ற பத்து இலட்சம் சைவப் பெருமக்களே.

உங்களைப் போன்று மேலும் பத்து இலட்சம் சைவப் பெருமக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக அந்த மண்ணின் மக்களாய் வாழ்ந்து வருகிறார்களே. அறிவீர்களா?

அவர்களின் அரசியல் எதிர்காலத்தை மேம்படுத்த உதவுங்கள் ஒத்துழையுங்கள்.’ என்று அழைப்பு விடுத்திருக்கிறார் சச்சிதானந்தன். அந்த பழங்குடியினர் திருநீறு அணிந்தவாறு காட்சிதரும் புகைப்படங்களையும் கூடவே பதிவிட்டுள்ள அவர்,

‘என் உடன் பிறப்புகள்
என் மரபணு
இரட்டையர்கள்
என் தொப்புள் கொடியார்
என் மொழியின் சிறப்பு

ழகரம் அவர்கள் மொழியிலும் கொண்டவர்கள் என் மொழியின் 12 உயிர் 18 மெய் மட்டுமே அவர்கள் மொழியிலும் கொண்டவர்கள்.

திருநீறு பூசும் பெரு மாறர். வேலன் வழிபாட்டின் காலத்தின் கோலர். சைவத்தின் இயற்கை வழிபாடர்,

பாம்பையும் வேம்பையும் நிலத்தையும் நீரையும் தீயையும் வானையும் காற்றையும் வழிபடுவோர். மலைகளில் முருகனைக் காண்போர். ஆற்றில் திருமாலைக் காண்போர். பாலையில் காளியைக் காண்போர்.

வேடருக்கும் நாகருக்கும் இயக்கருக்கும் பிரான்மலைக் குடிகளுக்கும் ஈழவருக்கும் தோடருக்கும் அந்தமான் பழங்குடிகளுக்கும் ஆத்திரேலிய ஆதி குடிகளுக்கும் மரபணுப் பொதுமையைக் கண்டவர்கள் சொல்கிறார்கள் படியுங்கள்’ என்றும் தெரிவித்துள்ள சச்சிதானந்தன், அந்தப்பழங்குடியினருக்கும் சைவர்களுக்கும் இடையேயுள்ள வரலாற்று சான்றுகளை கூறும் பல வரலாற்று நூல்களை ஆதாரமாக சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவர்கள் சைவர்களாக இல்லாமல் இருந்தாலும் கூட ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்கான குரலாக நடைபெறவிருக்கும் அந்த வாக்கெடுப்பில் இவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டியது அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களின் கடமை.!

**- ஊர்க்குருவி.**

# மல்வத்து ஓயா, யான் ஓயாவில் மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டம்

கொழும்பு, செப். 15

கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்தில் மேற்கொள் ளப்படும் மிதக்கும் சூரிய மின்சக்தித் திட்டத்தை வெளிநாட்டு முதலீட்டுடன் கூடியதாக முன்னெடுப் பதற்கு, அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

யான் ஓயா நீர்த்தேக்கத் தில் சூரிய சக்தி மின் தகடு களை பொருத்தவும் மற்றும் நூறு மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் உத்தேச மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்தில், சூரிய சக்தி மின் தகடுகளை நிறுவுவ தற்கும் ஆலாசிக்கப்படுகிறது.

இது தொடர்பில்,பிரதமர் தினேஷ் குணவர்த்தன முன் வைத்த யோசனை குறித்து, யான் ஓயா அணையை நிர்மா ணித்த சீன முதலீட்டாளர்கள் பிரதமருடன் கலந்துரை யாடினர்.

மிதக்கும் சூரிய சக்தி மின் தகடுகளை நிறுவுவதன் மூலம் யான் ஓயா நீர்த்தேக்கத்தை மெகா சூரிய மின் உற்பத்தி தளமாகப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கான மின்சாரத்தை உற்பத்தி செய்து, கீழ் மல்வத்து ஓயா திட்டத்தை நிறைவு செய்வதற்கு தேவையான நிதியை ஈட்ட முடியுமென் றும் சீன முதலீட்டு குழு தெரிவித்துள்ளது. (அ)

# ஓய்வு பெற்ற மருத்துவர்களை மீண்டும் கடமைக்கு அழைப்பதில் அரசு கவனம்!

கொழும்பு, செப். 15

ஓய்வு பெற்ற மருத்துவர் களை திரும்ப கடமைக்கு அழைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பான பிரேரணை அமைச்சர வையில் சமர்ப்பிக்கப்ப டவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதன்படி தற்போது நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக ஓய்வுபெற்ற வைத்தியர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்ப டையில் சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அலி சப்ரி ரஹீம் மீது மற்றொரு குற்றச்சாட்டு!

கொழும்பு, செப். 15

புத்தளம் மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அரசாங்கத்திற்கு சொந்தமான 214 ஏக்கர் காணியை பல வருடங்களாக சட்டவிரோதமாக பயன் படுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் இது குறித்து வெளிப்படுத் தப்பட்டுள்ளது.

மேலும் அந்த நிலத்தை தனியார் நிறுவனம் ஒன்று உப்பு உற்பத்திக்காக பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், சுமார் 14 வருடங்களாக இந்தக் காணியிலிருந்து அரசாங்கத் திற்கு வரி செலுத்தப்படா மையால் சுமார் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள் ளதாக புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங் களுக்கு அறிவிக்கப்படும் என புத்தளம் மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுவின் தலைவ ரும், பாராளுமன்ற உறுப் பினருமான சிந்தக மாயதுன்ன தெரிவித்துள்ளார்.

அலிசப்ரி ரஹீம் தங்கக்கடத்தலில் ஈடுபட்டு கையும் மெய்யுமாக சிக்கியிருந்தது குறிப் பிடத்தக்கது. (அ)

## பேத்தியை கொன்றவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 15

திருவேல்வேலியிலுள்ள விடுதியில் 12 வயதான தனது பேத்தியை அதி சக்தி வாய்ந்த மருந்துகள் ஏற்றி கொலை செய்த அம்மம் மாவை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

அவரை நேற்று பார் வையிட்ட நீதிவான், எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மன்னாரை சேர்ந்த ஓய்வுபெற்ற மருத்துவ மாதான 53 வயதான பெண்ணே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## இந்தியப் போர்க் கப்பல் திருகோணமலை வருகை




திருமலை, செப். 15

இந்திய கடற்படைக்கு சொந்தமான ‘ஐ.என்.எஸ். நிரேக்ஷாக்’ போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத் திற்கு வருகை தந்துள்ளது.

நேற்றுக் காலை வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

இந்திய போர்க்கப்பல், 70.5 மீற்றர் நீளமுடையது.

கப்பலில் 137 கடற்படை ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

குறித்த கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலப்ப குதியில் கடற்படையின் சுழியோடிகள் பிரிவுடன் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

‘ஐ.என்.எஸ். நிரேக்ஷாக்’ போர்க்கப்பல் எதிர்வரும் 21 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
15.09.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை

மீண்டும் சர்வதேச விசாரணை என்னும் சொல் அதிகளவில் உச்சரிக்கப்படுகின்றது. இதுவரையில், தமிழ்க் கட்சிகளால் மட்டும் உச்சரிக்கப்பட்ட சொல்லை - தற்போது, தென்பகுதியிலுள்ள கட்சிகளும் - ஏன் எதிர்க்கட்சித் தலைவரும் உச்சரிக்கின்றார். அமைதியாக இருக்கும் சம்பந்தனும் இதுபற்றி பேசியிருக்கின்றார். இவ்வாறான அறிக்கைகள் மூலம்தான் சம்பந்தன் இருக்கின்றார் என்பதையே மற்றவர்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த காலத்தில் தமிழ் கட்சிகள் மத்தியில் சர்வதேச விசாரணையை கோருவதில் யார் சரியானவர்கள் என்றவாறான போட்டியொன்று நிலவியது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் சுமந்திரன்மீது குற்றம்சாட்டுவதும் பின்னர், சுமந்திரன் அணியினர் காங்கிரஸ்மீது குற்றம்சாட்டுவதாகவும் நாட்கள் நகர்ந்தன. அண்மைக்காலமாக, தமிழ் கட்சிகளின் சர்வதேச விசாரணை கோரிக்கையானது ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை’யாகியிருந்தது. அவ்வப்போது, அமெரிக்க கொடியுடன் வீதிகளில்கூடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டுமே சர்வதேச விசாரணையென்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர்.

சனல் - 4 காணொலி வெளியானதைத் தொடர்ந்து மீண்டும் சர்வதேச விசாரணையை பலரும் உச்சரிக்கின்றனர். தமிழ் மக்களின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையின்போது அதென்ன விசாரணையென்று கேட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித்தோ ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்பதில் பிடிவாதமாகப் பேசுகின்றார். குற்றங்களை ஒப்புக்கொண்டால் மன்னிப்பு வழங்கவும் தயாரென்றும் கூறுகின்றார்.

ஈஸ்டர் தாக்குதலானது இஸ்லாமிய பயங்கரவாதத்தின் விளைவு. உலகளாவிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. இந்த அமைப்பு உலகின் பல பாகங்களிலும் பல தற்கொலை தாக்குதல்களை மேற்கொண்டிருக்கின்றது. சிரியாவில் அதன் பலமான தளத்தை இழந்து போனதைத் தொடர்ந்து, ஐ. எஸ். ஐ. எஸ் அமைப்பின் தலைவர் தலைமறைவானார். அதன் பின்னர், ஐ. எஸ் அமைப்பின் உலகளாவிய வலையமைப்புகள் பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டதாகவே கருதப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் 2019 ஏப்ரலில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதல் இடம்பெற்று இரு தினங்களிலேயே இது அவர்களுடைய தாக்குதல்தான் என்பதை ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. சிலுவை யுத்தக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை என்னும் அடிப்படையில் குறித்த தாக்குதலை அவர்கள் கொண்டாடினர். உறை நிலையிலிருந்த ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பின் வலையமைப்புகள் பலவும் இலங்கை தாக்குதலை கொண்டாடின.

இந்த நிலையில் இது தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று இடம்பெற்றால் யாரை தண்டிப்பது. ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பின் தலைவரையா? உலகில் எங்காவது ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பின் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை இடம்பெற்றிருக்கின்றதா? உண்மையில் ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையை கோருவதானது வெறும் தேர்தலுக்கான ஆட்டம் மட்டுமே! உண்மையில் ஈஸ்டர் தாக்குதலுக்கான சர்வதேச விசாரணைக் கோரிக்கையென்பது இறுதியில் தமிழ் கட்சிகளின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையை செல்லாக் காசாக்கவே பயன்படப் போகின்றது.

## வாள்வெட்டுடன் தொடர்புடைய நபர் 9 மாதங்களுக்கு பின்னர் சிக்கினார்

*யாழ்ப்பாணம், செப். 15*

யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் 09 மாதங்களுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மயிலங்காடு பகுதியில், கடந்த ஜனவரி மாதம் கொடுக்கல் வாங்கல் பிரச்னை காரணமாக இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மொட்டு கட்சியை வீழ்த்த முடியாது! பஸில் ராஜபக்ஷ சூளுரை

*கொழும்பு, செப். 15*

“பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் பயணத்தை முடக்கும் வகையில் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் மீண்டும் பொய் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைமூலம் மொட்டு கட்சியை வீழ்த்த முடியாது”, என்று பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

”மொட்டு கட்சியோ அல்லது ராஜபக்ஷக்களோ குண்டு தாக்குதல்களை நடத்தி ஆட்சியை பிடிக்கவில்லை. மக்கள் ஆசியுடன்தான் ஆட்சிக்கு வந்தோம். மக்கள் எமக்கு வழங்கியை ஆணை இன்னும் இழக்கப்படவில்லை. அடுத்து தேர்தலொன்று நடைபெற்றால் மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை தெரியவரும்.”-எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

## ll மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது!

*கொழும்பு, செப். 15*

குருநாகல் நகரில் உள்ள கலவன் பாடசாலை ஒன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் பதினொரு மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துஹெர பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேகத்துக்குரிய ஆசிரியர் மீது பெற்றோர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் தனது பாடத்தை கற்பிக்கும்போது வகுப்பில் உள்ள மாணவிகளின் உடலை தொட்டு, அழுத்தி, அந்தரங்க உறுப்புகளை தொட்டு துஷ்பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவிகள் இது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, அவர்கள் இது தொடர்பாக குருநாகல் பொலிஸ் தலைமையகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

## பொதுமன்னிப்பின் கீழ் 40 கைதிகள் விடுதலை

*மட்டக்களப்பு, செப். 15*

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஒரு பெண் கைதி உட்பட 40 பேர் விடுதலை செய்யப்பட்டனரென சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சிறு குற்றம் புரிந்த தண்டனைப் பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரனின் ஆலோசனைக்கு அமைவாக இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம சிறைச்சாலை அதிகாரி ஏ. பீ. பானுக தயந்த சில்வா உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பழுதடைந்த கேக் வவுனியாவில் விற்பனை

*வவுனியா, செப். 15*

பழுதடைந்த கேக் விற்பனை செய்ததாக வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றுக்கு எதிராக வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் உள்ள பிரபல பேக்கரி ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட கேக் ஒன்றை கொள்வனவு செய்தவர், குறித்த கேக் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர்கள் குறித்த சம்பவம் தொடர்பில் பரிசோதனைகளையும் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்ரெம்பர் - 15 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 29**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பிரதமை |




**மேடம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பயணங்களால் அலைச்சல் உண்டு. வாகனவசதிப் பெருகும். வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வாகனங்களை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். பொறுமை தேவைப்படும்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**தனுசு**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை வரும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களை சேர்ப்பீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

# ஏ. ஆர். ரஹ்மான் தமிழகத்தின் சொத்து அவரை வைத்து அரசியல் செய்யக்கூடாது

கொடைக்கானல், செப். 15

இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான் தமிழகத்தின் சொத்து. அவரை வைத்து அரசியல் செய்யக்கூடாது என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கொடைக்கானலில் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

தமிழகத்தில் பேசுவதற்கு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. ஆனால், முதல்வர் ஸ்டாலின் காலை முதல் இரவு வரை சனாதனம் குறித்து பேசுகிறார். காரணம், முதல்வருக்கு பயம் இருக்கிறது.

சனாதன தர்மத்தை பற்றி தவறாக பேசிய ஆ. ராசா, உதயநிதி ஸ்டாலின், சேகர்பாபு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்களை கண்டித்து முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற என்னை கைது செய்யவில்லை என்பதற்காக பொலிஸ் அதிகாரிகளை காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றியுள்ளனர்

ஏ. ஆர். ரஹ்மான் தமிழகத்தின் சொத்து. தமிழகத்தின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தியவர். அவரை வைத்து அரசியல் செய்யக்கூடாது. ஏ. ஆர். ரஹ்மானின் இசை கச்சேரி நடந்த இடத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் எனது வீடு உள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் திட்டமிடுதல் சரியாக இல்லை. அந்த வழியாக முதல்வர் மு. க. ஸ்டாலின் சென்றார். முதல்வர், பொதுமக்களுக்கு பொலிஸ் சரியாக பாதுகாப்பு கொடுக்கவில்லை. ஏ. ஆர். ரஹ்மானை சுற்றி நடந்த விஷயங்களைத் தான் பா. ஜ. க. குற்றச்சாட்டாக வைத்தது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# பாராளுமன்றத் தேர்தலில் கட்சி பலத்தை நிரூபிப்போம்!

## தே. மு. தி. க. தலைவர் அறிக்கை

சென்னை, செப். 15

தே. மு. தி. க. தொடங்கி 18 ஆண்டுகள் நிறைவுபெற்ற நிலையில் 2024 பாராளுமன்ற தேர்தலில் கட்சியின் பலத்தை நிரூபிப்போம் என விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பவை வருமாறு,

பல்வேறு சவால்களைத் தாண்டி, நல்ல நோக்கத்துக்காக தே. மு. தி. க. கட்சி தொடங்கப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இன்று (நேற்று) 19ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். தே. மு. தி. கவுக்கு எனத் தனி வரலாறு உண்டு. எந்த கட்சியிடம் இருந்தும் பிரிந்து வராமல், இலஞ்சம், ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆரம்பிக்கப்பட்ட கட்சி, மக்களின் இதயங்களில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளது.

கட்சி தொடங்கிய நாள்முதல் இன்றுவரை யாரிடமும் பணத்தை வசூல் செய்ததில்லை. சொந்த உழைப்பில் கட்சியை வளர்த்து வருகிறோம். பல வெற்றி, தோல்விகளைக் கடந்து இன்றும் நாம் வீறுநடை போடுகிறோம் என்றால் அதற்குக் காரணம் தொண்டர்கள்தான். வரவிருக்கும் 2024 பாராளுமன்றத் தேர்தலில் தே. மு. தி. கவின் பலத்தை அனைவருக்கும் நிரூபிப்போம் - என்றுள்ளது. (ஐ)

# இலங்கை கைது செய்த மீனவர்களை விடுவிக்க ஜெய்சங்கருக்கு கடிதம்!

## முதல்வர் எழுதினார்

சென்னை, செப். 15

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வலியுறுத்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் 3 விசைப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்ததாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இது போன்று கைது செய்யப்படுவது தொடர்கதையாகி வருகிறது. இது தமிழக மீனவர்களிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற சூழலையும் ஏற்படுத்தி வருகிறது.

மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள இந்த மீனவர்ககளின் படகுகள் கடலுக்குள் தெளிவான எல்லை நிர்ணயம் மற்றும் எல்லை தொடர்பான வரையறைகள் ஏதும் இல்லாததால், சில நேரங்களில் தற்செயலாக இலங்கை கடற்பரப்புக்குள் சென்று விடுகிறது. இதுபோன்ற கைது நடவடிக்கைகளால் மீனவ சமுதாயத்தினரிடையே பதற்றம் அதிகரித்து, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவித்திட ஏதுவாக, இலங்கை அரசுடன் உடனடியாகத் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பல்லாயிரக்கணக்கான இந்திய மீனவர்களின் வாழ்வில் அமைதியை ஏற்படுத்திடவும், இப்பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வினைக் காணவும், இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற தனது முந்தைய கோரிக்கையை மீண்டும் இத்தருணத்தில் வலியுறுத்துவதாக - அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# எடப்பாடி பழனிசாமி டில்லி பறந்தார்! பா. ஜ. க. தலைவர்களுடன் சந்திப்பு!!

சென்னை, செப். 15

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று டில்லி சென்றார். அங்கு மத்திய அமைச்சர் அமித் ஷா, பா. ஜ. க. தேசிய தலைவர் ஜே. பி. நட்டா ஆகியோரை சந்திக்க திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்களை குறிவைத்து சோதனை நடத்தி வந்த தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இது அ. தி. மு. கவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பா. ஜ. க. தேசிய தலைமையின் அழைப்பை ஏற்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று டில்லி செல்கிறார். இது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா. ஜ. க. தேசிய தலைவர் ஜே. பி. நட்டா ஆகியோரைச் சந்தித்துப் பேச இருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

இந்த சந்திப்பின்போது, தமிழக அரசியல் சூழல், தி. மு. க. கூட்டணி கட்சிகளின் நிலை, அ. தி. மு. க. - பாஜக உறவு, தேர்தல் கூட்டணி வியூகம் குறித்து ஆலோசிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், விரைவில் கூடவுள்ள மக்களவை கூட்டத் தொடரில் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்த இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

# கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவது நகைச்சுவை!

## பொதுஜன பெரமுன எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, செப். 15

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவது ஒரு நகைச்சுவை என பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே எஸ். எம்.சந்திரசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர். ஜனாதிபதியாக தெரிவானபோதிலும், தன்னால் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாமல் ஓடிப்போய்விட்டு, மீண்டும் மீண்டும் அரசியலுக்கு வருவது என்பது வேடிக்கையானது.

மக்களைக் கொல்லவிடாமல் பதவியை விட்டு விலகிச் சென்றவர், மீண்டும் அரசியலுக்கு வருவார் என்று நினைக்கவில்லை. பதவியை துறந்தவர் என்றளவில் அவருக்கு மரியாதை இருக்கிறது.

அவர் மீண்டும் அரசியலுக்கு வரத் தயாராகிவிட்டார் என்கிறார்கள். அது நடக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சுகளின் செயலாளராக அவர் பொறுப்புக்களை சரியாக செய்தார். ஆனால், ஜனாதிபதி பதவிக்கான கடமைகளை அவரால் நிறைவேற்ற முடியாமல் போனது.



பொதுஜன பெரமுன சார்பில் கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் என கூறுவது கனவாகவே காணப்படுகிறது. ஜனாதிபதி பதவியை நிர்வகிக்க முடியாமல் விலகிய கோட்டாபய ராஜபக்ஷ, வேறு சிறிய கட்சியில் இருந்து போட்டியிட்டு வெற்றியடைவார் என நான் நம்பவில்லை-என்றார்.

(அ)

# தயாசிறியை பதவி நீக்க ரூ. 50 இலட்சம் பந்தயம்?



கொழும்பு, செப். 15

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தன்னை நீக்குவதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண 50 இலட்சம் ரூபா பந்தயம் கட்டியுள்ளார் என பாராளுமன்ற உறுப்ப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் இருந்து பதவிகளையும் வரங்களையும் பெற்றுக்கொண்ட ஒரு குழுவினர், கட்சியை சீரழிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்கள் நயவஞ்சகமாகவும் சட்டவிரோதமாகவும் கட்சிக்குள் மீண்டும் பிரவேசித்து தம்மைக் கட்சியில் இருந்து நீக்கச் சதி செய்வதாகவும் தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

# முன்னாள் எம்.பி. மறியலில்!

கொழும்பு, செப். 15

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்து ஹெட்டிகமகேவுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சொகுசு ஜீப் வண்டியை போலி இலக்கத்தகடு போட்டு ஓட்டிச் சென்றமைக்காக அவர் கைது செய்யப்பட்டு அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று காலி பிரதான நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# முன்னாள் விரிவுரையாளரின் நூற்றாண்டு கால சிறப்புரை



யாழ்ப்பாணம், செப். 15

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒன்றுகூடல் நிகழ்வின் சிறப்புரை தொடர் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 8:30 மணிக்கு கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கல்வி அமைச்சு அதிகாரியும் சட்டத்தரணியும் ஆகிய கோதை நகுலராஜா ஆசிரியத்துவத்தின் பெருமை என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் சிவலோஜனி சுரேந்திரனும் நிறைவுரையை பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணனும் ஆற்றினர்.

நிகழ்வில் முன்னாள் விரிவுரையாளர் கோதை நகுல ராஜா கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வை கலாசாலையில் முதலாம் வருடத்தில் இரண்டாம் மொழியாக தமிழ் பாடத்தை கற்கும் ஆசிரிய மாணவி புத்திக நெறிப்படுத்தினார்.

(அ)

# ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் செப். 21 ஜனாதிபதி ரணில் உரை

## உலக தலைவர்களுடன் பேச்சு நடத்தவும் திட்டம்

கொழும்பு, செப். 15

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

“2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்” என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த மாநாடு செப்ரெம்பர் 18 முதல் 21 வரை நடைபெறும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலையான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டில் உலக தலைவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி விசேட உரையாற்ற உள்ளார்.

அதற்கு இணையாக, மிகவும் சிறந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களை அடிப்படையாகக் கொண்ட “காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுக்கக் கூடிய உலகளாவிய பொருளாதாரத்திற்கு மிகவும் சமமான மற்றும் விரைவான மாற்றத்திற்கான உலகளாவிய கூட்டு விருப்பத்தை நிரூபிப்பதில் ஒரு முக்கியமான அரசியல் மைல்கல்லை எதிர்பார்த்து, ஐ.நா பொதுச்செயலாளரால் கூட்டப்படும் “காலநிலை அபிலாஷைகள் பற்றிய மாநாட்டில்” ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்ற உள்ளார்.

அபிவிருத்திக்கான நிதியியல் தொடர்பான ‘கடன் நிலைபேற்றுத் தன்மையை உருவாக்குதல் மற்றும் உலகளாவிய நிதிப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்துதல்’ என்ற தலைப்பில் இடம்பெறும் உயர்மட்டக் கூட்டத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

தமது நியூயோர்க் விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் மற்றும் ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்களையும் சந்திந்தித்து கலந்துரையாட உள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சுமார் 40 முன்னணி தனியார் வர்த்தக நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இலங்கைக்கான பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான வட்டமேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்க உள்ளார்.

மேலும், கடல்சார் நாடுகளுக்கான மூன்றாவது ஆசிய-பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரையை ஆற்றவுள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் பங்கேற்க உள்ளனர்.

(அ)

# பல்கலைக்கழகங்களில் தொல்லையா? முறைப்பாடு அனுப்ப வட்ஸ்அப் வசதி!

கொழும்பு, செப். 15

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் புதிய மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் உயர்கல்வி அமைச்சும் பொலிஸாரும் இணைந்து புதிய செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு வட்ஸ்அப் இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

076 54 53 454 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல்கள், முறைப்பாடுகள், காணொளிகள் அல்லது படங்களை அனுப்ப முடியும் என அவர் கூறினார்.

மேலும், 1997 எனும் துரித அழைப்பு இலக்கத்துக்கும் இது தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# தலைமன்னாரில் கரையிலிருந்து மீன்பிடிக்க சென்ற இருவர் மாயம்!

மன்னார், செப். 15

தலைமன்னாரில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமற் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை மாலை 07.30 மணி அளவில் தலைமன்னார் கடற்கரையிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற ஜே. நிக்சன், ரி. சுமித்திரன் ஆகிய இருவருமே இவ்வாறு காணாமற்போயுள்ளனர்.

குறித்த இருவரும் தலைமன்னார் ஊர்மனையைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அவர்களைத் தேடிச் சென்ற படகுகளில் இரு படகுகள், கடுமையான காற்று மற்றும் கடல் கொந்தளிப்புப் காரணமாக உடன் கரை திரும்ப முடியாத நிலையில் கச்சத்தீவில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மகாசங்கத்தினரும் இந்துமத தலைவர்களும் பேச்சு நடத்தினால் குருந்தூர்மலைக்கு தீர்வு!

## கூறுகின்றார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



கொழும்பு, செப். 15

"குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் மகாசங்கத்தினரும், இந்து மதத்தலைவர்களும் இணைந்து பேச்சு நடத்தினால் சுமுக தீர்வை எட்டக்கூடியதாக இருக்கும். ஏனெனில் சில அரசியல்வாதிகள் இதனை வாக்கு வேட்டைக்காக பயன்படுத்துகின்றனர்."

-இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் அது சம்பந்தமாக செயற்பட்டுவரும் பிக்குகளுடன் கலந்துரையாடியுள்ளேன், அத்துடன், இது சம்பந்தமாக கதைக்கும் தமிழ் எம்.பிக்களுடனும் (கஜேந்திரகுமார் அல்லர்) பேச்சு நடத்தியுள்ளேன்.

அண்மையில் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது. இதன்போது வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினருடன் கதைத்தேன், இதன்போது இங்கு பிரச்னை வேண்டாம், பேச்சு மூலம் தீர்வு காணலாம் என அவர் மக்களுக்கு சொன்னார்.

குறிப்பாக இந்து மத தலைவர்களுடன், எமது மகாசங்கத்தினர் கலந்துரையாடினால் இப்பிரச்னையை சுமுகமாக தீர்த்துக்கொள்ளலாம். ஏனெனில் வாக்குவங்கியை கருத்திற்கொண்டு இவ்விவகாரத்தில் சிலர் அரசியல் நடத்த முற்படலாம்-என்றார். (அ)



# சுகாதார அமைச்சருக்கு எதிராக 2 ஆவது நாளாகவும் போராட்டம்

கொழும்பு, செப். 15

சுகாதார அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளை பதவி விலகுமாறு கோரி சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான பிரஜைகள் அமைப்பு, என்னால் தாய்நாட்டுக்கு அமைப்பு மற்றும் சில அரசியல் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்தன.

சுகாதார அமைச்சர், செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை பதவி விலகுமாறு கோரி இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் பதவி விலகும் வரை தாம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

# 3 வருடங்களுக்குள் அஸ்வெசும கொடுப்பனவை நிறுத்த திட்டம்

கொழும்பு, செப். 15

மூன்று வருடங்களுக்குள் அஸ்வெசும கொடுப்பனவை நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தில் பயனடையும் நபர்களை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, சமுர்த்தி பிளஸ் வேலைத்திட்டத்தின் கீழ் அவர்களை பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக பதில் அமைச்சர் அனுப பெஸ்குவல் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ரயிலில் மோதுண்டு யானை உயிரிழப்பு

கொழும்பு, செப். 15

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் மீனகயா இரவு தபால் ரயிலில் மோதுண்டு யானையொன்று உயிரிழந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த ரயில் 05 மணித்தியாலங்கள் தாமதமாகி பயணித்துள்ளதாக ரயில்வே போக்குவரத்து பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இதிபொலகே தெரிவித்தார்.

வெலிகந்தை மற்றும் புனானை ரயில் நிலையங்களுக்கு இடையே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த இரவு தபால் ரயிலும் இதன் காரணமாக தாமதமாக பயணித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னதாக குறித்த இடத்தை அண்மித்த பகுதியொன்றில் இரவு 09.15 அளவில் புலதிசி ரயிலில் மோதுண்டு யானையொன்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் இந்திய முதலீட்டை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள்!



கொழும்பு, செப். 15

இலங்கையில் இந்திய முதலீட்டை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

இலங்கை இந்திய சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் நேற்று முன் தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட இரு தரப்பு பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் மூலோபாயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பின் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய பிரதமர், தனியார் துறையில் இந்திய முதலீடுகளை ஊக்குவிக்க இந்திய தலைமை நிறைவேற்று அதிகாரிகளின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் இந்தியாவின் பல நிறுவனங்களைக் கொண்ட குழுமத்தின் தலைவர் டி.எஸ். பிரகாஷ், பால் உற்பத்தி மற்றும் சேகரிப்புக்கு விவசாய கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம், இந்தியாவின் அமுல் நிறுவனத்தின் வெற்றியிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதன் மூலம் இலங்கை தனது பால் தொழிலை விரிவுபடுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பல தசாப்தங்களாக இலங்கையில் வர்த்தகம் செய்த அனுபவத்தை மேற்கோள் காட்டிய உறுப்பினர்கள், இந்திய மாநிலங்களைச் சேர்ந்த தொழில்முயற்சியாளர்கள், மிகப் பெரிய இந்திய சந்தைக்கான தயாரிப்புகளை தயாரிப்பதற்காக, இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். (அ)

# இலங்கைக்குத் தேவையான 10 வகையான தடுப்பூசிகள் உற்பத்தி செய்யும் "யாடென்"!

கொழும்பு, செப். 15

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள "யாடென்" மருந்து உற்பத்தி தொழிற்சாலை இலங்கைக்கு தேவையான 10 வகையான தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதாக நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஷஷிமல் திஸாநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, குறித்த தொழிற்சாலையில் இலங்கை முதலீட்டுச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான அவதானிப்புச் சுற்றுலாவின் போதே அவர் இதனை கூறினார்.

இந்த நிறுவனம் 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டது.

தற்போது அங்கு இலங்கைக்கு அத்தியாவசியமான 10 வகையான மயக்க மருந்து மற்றும் வலி நிவாரணிகள் மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கு தேவையான தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த தயாரிப்புகளுக்கு தேசிய மருந்து அதிகாரசபையின் பூரண அங்கீகாரம் கிடைத்துள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் தடுப்பூசிகள் அரச மருந்து கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகிறது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதல் பல ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்கு உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கடந்த வாரம், அமெரிக்க உணவு மற்றும் விலங்கு கட்டுப்பாட்டு ஆணையத்தின் அதிகாரிகள் குழு இந்த தொழிற்சாலைக்கு விஜயம் செய்து, இந்த தொழிற்சாலைக்கு கிடைத்த பெரிய வெற்றி-என்றார். (அ)

# 65,871 ஏக்கர் பயிர்கள் நாசம்!

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
**Department of Agriculture**

கொழும்பு, செப். 15

வறட்சி, மழை, மற்றும் புழுக்கள் போன்றவற்றின் தாக்கத்தினால், 65 ஆயிரத்து 871 ஏக்கர் பயிர்கள் நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பதிவாகியுள்ள பயிர் சேதம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் படி இந்த மாதம் 12 ஆம் திகதி வரை 67 ஆயிரத்து 122 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 65 ஆயிரத்து 411 ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் மற்றும் 465 ஏக்கர் ஏனைய பயிர்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவான பயிர் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 813 ஏக்கர் நிலங்களும், உடவலவ பிரதேசத்தில் 14 ஆயிரத்து 810 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்களும் சேதமடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பொறுப்புக்கூறலுக்கு பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்தவேண்டும்!

## பேர்ள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, செப். 15

**இலங்கையின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேச மயமாக்கப்பட்ட பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்தவேண்டும் என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு - பேர்ள் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 54ஆவது அமர்வின் ஐக்கிய நாடுகள்மனித உரிமை அலுவலகத்தின் இலங்கை குறித்த அறிக்கை குறித்த கலந்துரையாடல்களின்போது பேர்ள் அமைப்பு, தமிழ் மக்களிற்கு எதிரான யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றை நினைவு கூர்ந்துள்ளது.

நீதிக்கான முயற்சிகள் இலங்கை அரசாங்கத்தினதும் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளினதும் விருப்பத்திலேயே தங்கியுள்ளது என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. எனினும் இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகள் குறித்தும் பாதுகாப்புப் படையினர் குறித்தும் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க மறுத்துள்ளனர்-தவறியுள்ளனர் என பேர்ள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் ஆழமாக வேரூன்றிய சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதம் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் பின்னணியில் முக்கிய உந்துசக்தியாக செயல்படுகின்றது-இலங்கையில் உறுதியற்ற தன்மையையும் தண்டனையின்மையையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது-தமிழர்களை தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்றது எனவும் பேர்ள் தெரிவித்துள்ளது.

இது காணி அபகரிப்பு துரிதமாக இடம்பெறுவதற்கும் வடக்கு-கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு, சமீபத்தில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை நீதியும் பொறுப்புக்கூறலும் சாத்தியமாகும் வரை கடந்த காலங்கள் பாதிக்கப்பட்டவர்களிற்கு தொடர்ந்தும் மன உளைச்சலை கொடுக்கும் என்பதை நினைவூட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளது. (அ)

# நல்லூரில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட 3 மான்கள்!

## மயக்க ஊசி செலுத்தியதால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 15

நல்லூர் பகுதியிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டு வந்த மூன்று மான்களுக்கு மயக்க ஊசி செலுத்தப்பட்ட நிலை யில் உயிரி ழந்துள்ளதாக வனஜீவராசிகள் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நல்லூர் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்ட விரோதமான முறையில் மூன்று மான்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

பின்னர், இந்த மூன்று மான்களும் அவற்றை வளர்த்த



நபரிடம் மீட்கப்பட்டன. பின்னர் மான்களை வாகனத்தில் கொண்டு செல்ல வசதியாக மயக்க ஊசி செலுத்தப்பட்டது. அவற்றில் ஒரு மான் சம்பவ இடத்தி லேயே இறந்தது. ஏனைய இரண்டு மான்களும் பின்னர் இறந்தன.

இது தொடர்பில் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வனவிலங்கு உதவிப் பணிப்பாளர் தெரிவிததார். (அ)

# கொலை மிரட்டல் விடுத்த வழக்கு; லொஹான் ரத்வத்தைக்கு பிணை!

கொழும்பு, செப். 15

மதுபோதையில் இரவுநேரம் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று, தமிழ் அரசியல் கைதிகளில் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுத்த, அப்போதைய சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்தவை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு அனுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக சஞ்சீவ ஜயசூரிய நேற்று உத்தரவிட்டார்.

சந்தேகநபரான தற்போதைய பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிரான வழக்கை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் முறையாக விசாரிக்க தீர்மானித்த பிரதான நீதவான், சந்தேகத்திற்குரிய இராஜாங்க அமைச்சரை அன்றைய தினம் மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேலும் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கின் முதலாவது சாட்சியான பூபாலசிங்கன் சூரியபாலன் மற்றும் இரண்டாவது சாட்சியான மணியரசன் சுலக்ஷன் ஆகியோரை அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகி வழக்கு தொடர்பான சாட்சிகளை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான பூபாலசிங்கன் சூரியபாலனின் தலையில் துப்பாக்கியை வைத்து கொலைமிரட்டல் விடுத்ததாக, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தாக்கல் செய்த வழக்கை, அனுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய நேற்று விசாரணைக்கு எடுத்தார்.

நீதிமன்றம் வழங்கிய முன்னைய உத்தரவின் பிரகாரம், சந்தேகத்திற்குரிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்று முதல் தடவையாக திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இங்கு, சந்தேகநபரான இராஜாங்க அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை நீதிமன்றம் வாசித்த பின்னர், இராஜாங்க அமைச்சர் அனைத்து குற்றச்சாட்டுக்களிலும் தான் நிரபராதி என தனது சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மென்ட்ஸ் ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடமையாற்றிய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அன்றைய தினம் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் உட்பட 14 பேர் இந்த வழக்கில் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

# இலங்கை போக்குவரத்து சபையுடன் கைகோர்க்கிறது ஜேர்மன் நிறுவனம்

கொழும்பு, செப். 15

இலங்கை போக்குவரத்து சபையில் காணப்படும் தொழில்நுட்பவி யலாளர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் ஊடாக மாணவர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க பண்டார கோட்டேகொட தலைமையில் அண்மையில் கூடிய வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில்,

கல்வி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு மற்றும் இலங்கை -ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதற்கமைய சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடி 50 தொழில்நுட்ப மாணவர்களைக் கொண்ட குழுவுக்கு விசேட பயிற்சி வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றுபவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவது என்ற பிரதான நோக்கத்தின் கீழ் இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்ட போதும், இந்தத் தேவை தற்பொழுது சரியான முறையில் பூர்த்தி செய்யப்படுவதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை போக்குவரத்து சபையில் தொழில்நுட்பவியலாளர்களுக்குக் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் நோக்கில் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்துக்கு வருடாந்தம் உள்ளீர்க்கப்படும் மாணவர்களில் 50 பேரை போக்குவரத்து சபைக்கெனப் பயிற்சியளித்துத் தருமாறு இலங்கை போக்குவரத்துச் சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்குக் காணப்படும் அங்கீகாரம் காரணமாக வெளியேறும் மாணவர்களுக்கு அதிக கேள்வி இருப்பதால் வேறு தொழில்களை நோக்கி மாணவர்கள் செல்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், பயிற்றுவிப்பாளர்களுக்கான பற்றாக்குறை போன்ற வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இருந்தபோதும், இலங்கை போக்குவரத்துச் சபையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாணவர்களுக்கு உரிய பயிற்சியை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி விரைவில் முடிவெடுக்குமாறு குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அத்துடன், இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஆகியன இணைந்து கண்டியில் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிலங்கன் ஏயார் லைன்ஸிலிருந்து 60 விமானிகள் வெளியேறியுள்ளனர்!

கொழும்பு, செப். 15

சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் நிறுவனத்தில் இருந்து 60 விமானிகள் வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வெளிநாட்டு விமானிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏற்கனவே அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுள்ளதாக சிறிலங்கன் எயார்லைன்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிச்சர்ட் நட்டல் தெரிவித்தார்.

ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கும் சிறிலங்கன் எயார்லைன்சில் இருந்து, அண்மைய தேசிய பொருளாதார சவால்களுக்கு பின்னர், விமானிகளும் கணிசமான அளவில் வெளியேறியுள்ளனர்.

இந்த வெளியேற்றம், சிறீலங்கன் விமான சேவைக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகிவரும் இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம்!

கொழும்பு, செப். 15

'அஸ்வெசும' உதவித் திட்டம் தொடர்பான பணிகளில் இருந்து விலகியுள்ள நிலையில், வலுக்கட்டாயமாக குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுமாயின் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது அதிகாரிகள் ஏனைய அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு கடமைப்பட்டவர்கள் அல்ல என அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜெகத் சந்திரலால் தெரிவித்துள்ளார்.

'அஸ்வெசும' உதவித் திட்டம் தொடர்பான பணிகளினால் கிராம உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு அழுத்தங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான அழுத்தங்கள் தொடருமானால், தனது வழமையான கடமைகளில் இருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

'அஸ்வெசும' உதவித் திட்டம் என்பது சமுர்த்தி வேலைத் திட்டம் எனவும், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காகவே 1994 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த பணிகளை கிராம உத்தியோகத்தர்கள் மீது திணிக்க முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

ஈழநாடு



# ஆணைக்குழு அமைப்பதாக காட்டி காலத்தைக் கடத்துகின்றார் ரணில்

## கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, செப். 15

**உள்நாட்டிலேயே பல இருக்கும்போது இத்தனை பிரச்சனைகளுக்கும் ஒரு நிரந்தரமான தீர்வை காண வேண்டிய ஜனாதிபதி தற்போது நாட்டை விட்டு பல நாடுகளுக்கும் செல்வது மாத்திரமல்லாமல் எந்த பிரச்சனையை எடுத்துக் கொண்டாலும் ஒரு ஆணைக்குழு அமைப்பதாக காட்டி காலத்தைக் கடத்துகின்றார் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 21ஆம், 22 ஆம் திகதிகளில் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புச் சம்பந்தமாக விவாதம் வர இருக்கின்றது. இவ்வாறான பிரச்சனைகள் அனைத்தும் இந்த நாட்டில் இருக்கும் போது அதை விடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகம் சுற்றும் வாலிபனாக ஒவ்வொரு நாடாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கின்றார்.

உள்நாட்டில் இத்தனை பிரச்னைகள் இருக்கும்போது இத்தனை பிரச்னைகளுக்கும் ஒரு நிரந்தரமான தீர்வை காணவேண்டிய ஜனாதிபதி, தற்போது நாட்டை விட்டு பல நாடுகளுக்கும் செல்வது மாத்திரமல்லாமல் எந்த பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் ஆணைக்குழுக்களை அமைத்து காலத்தைக் கடத்துகின்றார்.

தற்போதைய உயிர்த்த ஞாயிறு பிரச்னை தொடர்பாக மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து இது விடயமாக விசாரித்து அந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக இருக்கின்றார். ஆனால் பாராளுமன்றத்தில் இன்று இருக்கும் பொதுஜன பெரமுன கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுமே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூறி நிற்கும் போது ஜனாதிபதி மாத்திரம் மூன்று பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து சனல் 4 வெளியிட்ட வீடியோவை விசாரித்து ஒரு அறிக்கையை தயாரிப்பது என்பது இந்த நாட்டு மக்களை மாத்திரம் அல்ல சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயல் -என்றார். (அ)

# பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றல் சேவையினை மேம்படுத்த நடவடிக்கை

அம்பாறை, செப். 15

கல்முனை மாநகராட்சி எல்லையினுள் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றலை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கப்படும் பிரச்னைகள் மற்றும் ஆலோசனைகளை அதிபர்களிடம் கேட்டறிந்து கொண்ட மாநகர ஆணையாளர், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்தினார்.

திண்மக்கழிவகற்றல் சேவையின்போது மாநகர சபையினால் வகுக்கப்படும் பொறிமுறைகளுக்கேற்ப திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் குப்பைகள் ஒப்படைக்கப்படுமாயின் பாடசாலைகளில் இருந்து அவற்றை இலகுவாக அகற்றிக் கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக உக்கும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் என குப்பைகளை வகைப்படுத்தி வெவ்வேறு பைகளில் சேகரித்து வைக்கவேண்டும் எனவும் அவற்றை பாடசாலைகளின் நுழைவாயில்களில் வைத்து தாமதமின்றி உரிய நேரத்தில் ஒப்படைக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக குப்பைகளை வகைப்படுத்தி சேகரிப்பதற்கான பைகள் அனைத்து பாடசாலைகளுக்கும் மாநகர சபையினால் இதன் போது இலவசமாக வழங்கப்பட்டன.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜெளஸி, திண்மக்கழிவகற்றல் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பாடசாலைகளின் அதிபர்களும் பங்கேற்றிருந்தனர். (அ)

# மரம் முறிந்ததால் பாடசாலை சேதம்





அம்பாறை, செப். 15

சம்மாந்துறை அல்மதினா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வீசிய காற்றில் பாரியவேம்பு மரம் விழுந்து பாடசாலை ஒன்று சேதமடைந்துள்ளது.

மரம் முறிந்ததில் பாடசாலை வகுப்பறைக் கட்டடம் பலத்த சேதம் அடைந்துள்ள நிலையில் நேற்று காலை மரங்கள் அகற்றப்பட்டன. (அ)

# கிழக்கில் போதைப்பொருள் அச்சுறுத்தலை அனைவரும் இணைந்தாலே முறியடிக்கலாம்

## கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

அம்பாறை, செப். 15

போதைப்பொருள் கடத்தல் வர்த்தகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை அனைவரும் ஒன்றிணைந்தே இல்லாமல் செய்ய வேண்டும் என கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆலோசனை குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் உள்ளிட்ட கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கையானது அதிகளவாக இடம்பெறுகின்ற பகுதியாக கல்முனை பிராந்தியம் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்த பகுதியில் திறமையாக கடமையாற்றுகின்ற பொலிஸார் இக்கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள். இது வரவேற்கதக்க ஒன்றாகும்.



இத்தகைய கஞ்சா பாவனையானது வெளிநாடுகளில் இருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இங்கே விற்கப்படுகின்றது. இவற்றினூடாக இவற்றுக்கு அதிகளவான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள்.

இவற்றைவிட தற்போது இலங்கை மேலும் பாரிய போதைப்பொருள் கடத்தலுக்குள் சிக்கியுள்ள அபாயத்தை அடைந்துள்ளது. அதாவது கொக்கெய்ன் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கைக்கு ஊடாக அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும் அந்தக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கெய்ன் கேரள கஞ்சாவினை விடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். எனவே இவ்வாறான சட்டவிரோத செயல்களை முறியடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறாயின் அதனை சாத்தியமாக்க முடியும் -என்றார். (அ)

# முன்னாள் சபாநாயகர் நினைவு தின நிகழ்வு

அம்பாறை, செப். 15

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னனிகளின் ஸ்தாபகரும்,முன்னாள் சபாநாயகருமான எம்.ஏ.பாக்கீர் மாக்கார் மற்றும் டாக்டர் பரீட் மீரா லெவ்வை ஆகியோரின் நினைவு தின நிகழ்வு ஒலுவில் கிரீன் வில்லா ஹோட்டாலில் இடம் பெற்றது.

அ.இ.மு.லீக் வாலிப முன்னணியின் மாவட்ட தலைவர் ஏ. மாபீர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் தேசிய பணிப்பாளரும், மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.ஐ.உதுமாலெவ்வை, ஏறாவூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எல்.ஏ. லெத்தீப் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.



அமைப்பின் செயலாளர், பொருளாளர் உட்பட மாவட்ட பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்ட இந் நிகழ்வில் பாக்கீர் மாக்கார், மற்றும் பரீட் மீரா லெவ்வை ஞாபகார்த்த நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது டன் இருவருக்குமான துவா பிராத்தனையும் யூ.எல்.நியாஸ் மௌலவினால் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# லிபியாவில் புயல், மழை; 6 ஆயிரம் பேர் மரணம்!

## உயிரிழப்பு இரு மடங்காகும் அபாயம்!

திரிபோலி, செப். 15

**லிபியாவில் புயல், மழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆறு ஆயிரத்தைக் கடந்தது. பல ஆயிரம் பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.**

**மத்திய தரைக் கடலின் ஒரு பகுதியான அயோனியன் கடல் பகுதியில் அண்மையில் புயல் உருவானது. டேனியல் என்று பெயரிடப்பட்ட இந்தப் புயல் கடந்த 10ஆம் திகதி லிபியாவின் பங்காசி பகுதியில் கரையைக் கடந்தது.**



அப்போது மணிக்கு 165 கி.மீ. வேகத்தில் காற்று வீசியது. டேனியல் புயலால் கடந்த சில நாட்களாக லிபியாவில் வரலாறு காணாத பலத்த மழை பெய்தது. கனமழையால் கிழக்கு லிபியா பகுதியில் டெர்னா நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அந்த நதியில் கட்டப்பட்டுள்ள 2 அணைகள் உடைந்தன. இதனால், டெர்னா, பாய்தா, சூசா, ஷாஹத், மார்ஜ் உள்ளிட்ட பல வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இஸ்லாமிக் ரிலீஃப் சலா அமைப்பின் செயல்பாட்டாளர் ஒருவர் கூறுகையில், "டெர்னாவின் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இது கிட்டத்தட்ட இரு மடங்காகக் கூட அதிகரிக்கலாம். நகரத்தின் 30 சதவீதம் முழுவதுமாக மூழ்கிவிட்டது. டெர்னாவில் ஏற்பட்டுள்ளது ஒரு மினி சுனாமி எனக் கூறலாம். அந்த அளவுக்கு அத்தனையையும் வாரி சுருட்டிக் கொண்டது. வீடுகளையே தரைமட்டமாக தண்ணீர் இரையாக்கிக் கொண்டுள்ளது. இதில் குடும்பங்கள் பிழைப்பது எங்கே. டெர்னா ஒரு பழமையான நகரம். அங்கு பல குடும்பங்கள் ஆண்டாண்டு காலமாக வசித்துவந்தன. டெர்னாவின் பலி எண்ணிக்கை இரு மடங்கு அல்ல நான்கு மடங்கு அதிகரித்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்றார்.

எகிப்தில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக அண்டை நாடான லிபியாவுக்குப் புலம் பெயர்வோர் தேர்வு செய்வது கிழக்கு பகுதிதான். புயல் மற்றும் அணை உடைப்பால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு லிபியாவில் 78 எகிப்தியர்கள் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டு எகிப்துக்கே அனுப்பப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டன.

டேனியல் புயல் மேற்கு லிபியாவில் தாக்கியபோது கிழக்கு லிபியாவின் டெர்னா அணை எப்படி உடைந்தது என்ற சந்தேகம் ஏற்படலாம். டேனியல் புயல் வீசியபோது மழை வெள்ளம் அணைக்குப் பின்புறத்தில் மிக அதிகமாகத் தேங்கியது. இது அணை உள்வாங்கிக் கொள்ள வழிவகுத்தது. அழுத்தத்தால் அணை உள்வாங்கி உடைய டெர்னா பேரழிவை சந்தித்துள்ளது என்று வல்லுநர்கள் விளக்குகின்றனர்.

லிபியாவுக்கு துருக்கி, எகிப்து, கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளன. ஐக்கிய அரபு அமீரகம் 150 தொன் உணவு, நிவாரணப் பொருட்கள், மருந்துகள் கொண்ட இரண்டு விமானங்களை அனுப்பியுள்ளது. குவைத்தில் இருந்து 40 தொன் நிவாரணப் பொருட்களுடன் விமானத்தை அனுப்பியுள்ளது. ஜோர்தான் ராணுவ விமானத்தில் உணவுப் பொட்டலங்கள், கூடாரங்கள், போர்வைகள், விரிப்புகளை அனுப்பியுள்ளது.

ஜேர்மனி, ருமேனியா, பின்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளன. ஐ. நாவும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வருகிறது. உள்நாட்டுக் கலவரத்தால் ஆண்டாண்டு காலமாக பாதிக்கப்பட்ட டெர்னா தற்போதுதான் மீண்டுவரத் தொடங்கியது அதற்குள் இந்தப் பேரிடர் நிகழ்ந்துவிட்டது என லிபியாவுக்கான யுனிசெவ் அமைப்பின் தலைவர் மிச்செல் செர்வதெய் வருத்தம் தெரிவித்துள்ளார். (ஐ)



# 1,000 ஆண்டுகள் 'மம்மி' காட்சிப்படுத்தப்பட்டது

மெக்சிகோ, செப். 15

மெக்சிகோ நாட்டில் இரண்டு ஏலியன் உடல்களை அந்நாட்டு ஆய்வாளர்கள் பொதுமக்கள் காட்சியப்படுத்திய விவகாரம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரபஞ்சத்தில் பூமியில் இல்லாத வேறு உயிரினங்கள் உள்ளனவா என்பது குறித்த ஆய்வுகள் பன்னெடுங்காலமாக நடந்து வருகின்றன. அதுகுறித்த தெளிவான முடிவுக்கு இன்னும் ஆய்வாளர்களால் வர இயலவில்லை. இந்த சூழலில் மெக்சிகோவைச் சேர்ந்த பத்திரிகையாளரும் யு.எவ். ஓ. ஆய்வாளருமான ஜெய்மீ மாஸ்ஸன் என்பவர், மெக்ஸிகோ காங்கிரஸ் பிரதிநிதிகள் சபை விசாரணையின்போது இரண்டு ஏலியன் உடல்களை காட்சிப்படுத்தியுள்ளார்.

ஹாலிவுட் படங்களில் வரும் ஏலியன்களைப் போன்ற தோற்றம் கொண்ட அந்த உடல்கள் அளவில் சிறியதாகவும், கைகளில் மூன்று விரல்களுடனும், தலையின் பின்பகுதி பெரியதாகவும் உள்ளன. மம்மிகளாக்கப்பட்ட அந்த உடல்கள், ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை என்றும், அவை மனிதரின் உடல்களல்ல என்பது அவற்றின் மரபணு சோதனையில் தெரியவந்ததாகவும் ஜெய்மீ மாஸ்ஸன் கூறியுள்ளார். மேலும், இவை 2017ஆம் ஆண்டு பெரு நாட்டில் உள்ள நாஸ்கா பாலைவனத்தில் கண்டெடுக்கப்பட்டதாக மாஸ்ஸன் கூறுகிறார். நாஸ்கோ லைன்ஸ் எனப்படும் பிரம்மாண்ட ஓவியங்கள் ஏலியன்களால் வரையப்பட்டவை என்று சொல்லப்படுவதுண்டு. இது தொடர்பான பல்வேறு தகவல்கள் இணையத்தில் கிடைக்கின்றன.

மேலும் மெக்சிகோ தேசிய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அந்த ஏலியன்களின் உடல்களில் முட்டைகள் இருந்ததை கண்டறிந்ததாகவும் மாஸ்ஸன் கூறியுள்ளார். இந்த உடல்களை காட்சிப்படுத்தியவர்களில் மெக்சிகோ கடற்படையின் ஆரோக்கியத்திற்கான அறிவியல் நிறுவனத்தின் இயக்குனர் ஜோஸ் டி. ஜீசஸ்சும் ஒருவர். ஏலியன்கள் என்று சொல்லப்படும் அந்த உடல்களில் உள்ளிழுக்கக்கூடிய கழுத்து, பெரிய மூளைகள், பெரிய கண்கள் இருந்ததற்கான ஆதாரங்களை ஜோஸ் டி. ஜீசஸ் சமர்ப்பித்துள்ளார்.

இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் விவாதத்தை கிளப்பியுள்ளது. மெக்சிகோ ஆய்வாளர்களின் இந்த கருத்தை பல வேறு ஆய்வாளர்கள் ஏற்கவில்லை. மேலும் கடந்த 2015ஆம் ஆண்டு இதே போல பெரு நாட்டிலிருந்து ஒரு வேற்றுகிரகவாசியின் உடலை கண்டுபிடித்ததாக மாஸ்ஸன் தெரிவித்தார். ஆனால், பின்னர் அது ஒரு மனித குழந்தையின் மம்மியாக்கப்பட்ட உடல் என்று கூறி நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகளின் பெயரை 667 தடவைகள் உடலில் பச்சை குத்தி சாதனை!



லண்டன், செப். 15

இங்கிலாந்தை சேர்ந்த ஒருவர் தனது மகளின் பெயரை உடலில் 667 முறை பச்சை குத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

அவரது பெயர் மார்க் ஓவன் எவன்ஸ். 49 வயதான இவர் ஏற்கனவே தனது மகளின் பெயரான லூசி என்பதனை 267 முறை பச்சை குத்தி கடந்த 2017ஆம் ஆண்டு சாதனை படைத்திருந்தார்.

இந்நிலையில் 2020ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த டீட்ரா விஜில் என்பவர் தனது பெயரை உடலில் 300 முறை பச்சை குத்தி மார்க் ஓவன் எவன்ஸின் சாதனையை முறியடித்தார். இதைத்தொடர்ந்து எவன்ஸ் விஜிலின் சாதனையை முறியடித்து மீண்டும் சாதனை படைக்க திட்டமிட்டார்.

இதன்படி கின்னஸ் சாதனை அமைப்புக்கு தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில் 2 பச்சை குத்தும் கலைஞர்கள் மூலம் தனது உடலின் முழுப்பகுதியிலும் மகளின் பெயரை 667 முறை பச்சை குத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

"இந்த சாதனையை எனது மகளுக்கு அர்ப்பணிக்கிறேன்", என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# வீச முயன்ற கைக்குண்டு முன்னதாக வெடித்ததில் 5 பலஸ்தீனர்கள் மரணம்!




காசா, செப். 15

இஸ்ரேல் இராணுவத்தின் வேலியை தகர்க்க கைக்குண்டுகளை வீச முயன்றபோது அது முன்னதாகவே வெடித்ததில் 5 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

பலஸ்தீனம்- இஸ்ரேல் நாடுகளுக்கு இடையிலான காசா முனையில் இஸ்ரேல் இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்துவது வழக்கம். இதேபோன்று, காசா முனையை பிடித்து வைத்திருக்கும் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களும் தாக்குதல் நடத்துவார்கள்.

இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக போராட்டக்காரர்களும் காசா முனையில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் அந்த இடம் ஒரு போர்க் களம் போன்று காட்சியளிக்கும். கடந்த 2005ஆம் ஆண்டு காசா முனையில் இருந்து இஸ்ரேல் இராணுவம் வெளியேறியது.

அந்த பகுதியில் வேலியிடப்பட்டு எல்லைகள் பிரிக்கப்பட்டுள்ளன. 2007இல் அந்த பகுதியை ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவம் வெளியேறிய நாளை நினைவு கூரும் வகையில் போராட்டக்காரர்கள் மிகப்பெரிய அளவில் திரண்டனர்.

அவர்கள் நாட்டின் கொடியை அசைத்து, ரயர்களை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். வேலியை தகர்க்கும் வகையில் குண்டுகளை வீச முயன்றுள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக குண்டுகள் வீசப்படுவதற்கு முன்னதாகவே வெடித்துள்ளது. இதனால் மிகப்பெரிய சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் ஐந்து பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கு முன், போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் கையெறி குண்டுகள், மற்ற வெடிபொருட்களை எல்லையை நோக்கி வீசினார்கள். இராணுவம் அவர்களை கட்டுப்படுத்த கண்ணீர் புகைக்குண்டுகளை பயன்படுத்தினர். இதில் 25 பேர் காயம் அடைந்தனர் என இராணுவம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலதிக பரிசோதனைக்காக சிறுமியின் கை கொழும்புக்கு!

## யாழ். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய

யாழ்ப்பாணம், செப். 15

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 8 வயது சிறுமியின் அகற்றப்பட்ட கையை, மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மல்லாகத்தைச் சேர்ந்த சாண்டில்யன் வைசாலியென்ற சிறுமி தோல் கிருமித் தொற்றினால் பாதிக்கப்பட்டு, காய்ச்சலுடன் தனியார் வைத்தியசாலையை நாடியுள்ளார். அங்கு அவருக்கு கனுலா ஏற்றப்பட்டு, வீட்டிலிருந்து தனியார் வைத்தியசாலைக்கு வந்து ஊசியேற்றிச் சென்றுள்ளார். பின்னர் நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இரண்டு கைகளிலும் கனுலா ஏற்றப்பட்டு மருந்து செலுத்தப்பட்டதாகவும், அங்கிருந்தும் மாற்றப்பட்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக இந்த விவகாரத்தில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள தாதியும் தெரிவித்திருந்தார்.

இதன் பின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமியின் கை அகற்றப்பட்டது.

சிறுமியின் கை யாழ். போதனா வைத்தியசாலையில் நடந்த தவறினால் அகற்றப்பட்டதா அல்லது தனியார் வைத்தியசாலைகளில் நடந்த தவறினால் அகற்றப்பட்டதா என்பது தெரியாத நிலையில், அது தொடர்பான விசாரணைகள் நடந்து வருகின்றன.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விசாரணைக் குழுவின் விசாரணைகளை நிறைவு செய்ய மேலும் 10 நாட்கள் தேவையென தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சிறுமியின் கையை கொழும்புக்கு அனுப்பி மேலதிக பரிசோதனைகளை மேற்கொண்டு, கை அகற்றப்பட்டதற்கான காரணத்தை கண்டறிய நீதிமன்றம் உத்தரவிட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

# பிரபல போதைப்பொருள் வர்த்தகர் சஞ்சீவ் கைது!

கொழும்பு, செப். 15

போதைப்பொருள் வர்த்தகரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான கணேமுல்லை சஞ்சீவ கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில் இருந்து இலங்கைக்கு திரும்பியபோதே அவர் கைது செய்யப்பட்டார் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் நேபாளம் - காத்மாண்டுவில் இருந்து கட்டுநாயக்கவிற்கு போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வந்துள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

கடவுச்சீட்டில் ‘சேனாதிரகே கருணாரத்ன’ என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது.

எனினும், கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் தொடர்ச்சியான விசாரணைகளுக்கு அமைய அவர் கணேமுல்லை சஞ்சீவ என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அடுத்ததாக விசேட பொலிஸ் குழுவிடம் ஒப்படைக்கப்படுவார் என குடிவரவு குடியகழ்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# போராட்டத்தில் ஈடுபட்டவர் திடீரென்று உயிரிழந்தார்!

கொழும்பு, செப். 15

அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து பொல்கொட ஆற்றில் மலக்கழிவுகளை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் திடீரென உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம பொல்கொட பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

பொல்கொட ஆற்றில் கழிவுகளை கொட்டும் ஹோட்டலுக்கு எதிராக உயிரிழந்த நபர் உட்பட கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினரும் விடுதிக்கு வந்து சுற்றுப்புறத்தை ஆய்வு செய்தபோது விடுதியின் பின்புறம் ஒதுக்கப்பட்ட பகுதி அனுமதியின்றி நிரப்பப்பட்டிருப்பது தெரிந்தது.

பின்னர் கிராம மக்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகளிடம் அந்த இடத்தை சுட்டிக்காட்டி, காப்புக்காட்டில் சட்டவிரோதமாக கொட்டப்பட்டுள்ள கழிவுகள் மற்றும் கருங்கற்களை அகற்றும் வரை அந்த இடத்தில் தங்குவோம் என தெரிவித்தனர்.

ஹோட்டலில் இருந்து பொல்கொட ஆற்றுக்கு படகுகளில் ஏறுவதற்கு பயன்படுத்தப்படும் கொங்கிரீட் கட்டுக்கு அடியில் கழிவுநீரை ஆற்றில் செலுத்துவதற்கு குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்தது. உயிரிழந்த நபர் அந்த இடத்தை பரிசோதித்தபோது திடீரென சுகவீனமடைந்து பண்டாரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இந்த ஹோட்டல் அமைந்துள்ள பகுதியில் இரவு நேரங்களில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன் வீட்டில் தங்குவதற்கு கூட சிரமமாக உள்ளதாகவும், இது தொடர்பில் அப்பகுதி மக்கள் பண்டாரகம் பொலிஸில் பலமுறை முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் ஹோட்டல் அதிகாரிகளுக்கு எதிராக கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பண்டாரகம பொலிஸார் பாதுகாப்புக்காக அங்கு வந்திருந்தனர். (அ)



# ஐந்து குடிதண்ணீர்த் தொகுதிகள் கிளிநொச்சி மக்களுக்காக திறப்பு!

கிளிநொச்சி, செப். 15

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் முதல் கட்டமாக 5 குடிதண்ணீர் தொகுதிகள் மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டன.

அந்த வகையில் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் முதல் கட்டமாக 5 குடிதண்ணீர் தொகுதிகள் மக்கள் பாவனைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், திணைக்கள அதிகாரிகள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கடலில் அத்துமீறி மீன்பிடித்த 17 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த 17 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி, தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதால் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துமீறும் இந்திய மீனவர்களை கைது செய்யுங்கள் என இலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தினாலும், கடற்படை மெத்தனமாக செயற்படுவதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

நேற்று முன் தினம் 3 விசைப் படகுகளில் வந்த 17 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு நெடுந்தீவு படற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தவர்களே கைதாகினர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இரு இழுவைப் படகும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு படகும் இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துவரப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நீரியல்வளத்துறை அதிகாரிகள் மீனவர்களை ஊற்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். (அ)

# கிளிநொச்சி ஆலயத்தில் அலங்காரப் பணியில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது ரௌடிகள் தாக்குதல்!

கிளிநொச்சி, செப். 15

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஆதி விநாயகர் ஆலயத்தில் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன் தினம் இரவு அலங்கார பணிகளில் ஈடுப்பட்டிருந்த இளைஞர்கள் மீது அதே கிராமத்தைச் சேர்ந்த ரவுடிக்கும்பல் ஒன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நான்கு இளைஞர்கள் உடனடியாக அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் இன்றைய தினம் அவசரமாக சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் வைத்தியசாலையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



குறித்த ரவுடிக்குழுவினர் தொடர்ச்சியாக பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுப்பட்டு வருகின்ற குழுவினர் என்றும், கடந்த காலங்களில் பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கும் பொது மக்கள், இந்தக் குழுவினரால் கிராமத்தில் நிம்மதியற்ற நிலைமை உருவாகியுள்ளது என்றும் கவலை தெரிவித்துள்ளனர்.

கஞ்சா, கசிப்பு என சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுப்பட்டு வரும் இந்தக் குழுவினர் தங்களது செயற்பாடுகளுக்கு இடையூறாக இருப்பவர்கள் மீது தாக்குதல் நடத்துவது அவர்களை அச்சுறுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுப்பட்டு வருகின்றபோது பொலிஸாரால் எவ்வித நடவடிக்கைகளும் இது வரை இவர்கள் மீது மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் குழுவினர் மீது பல முறைப்பாடுகள் பொலீஸ் நிலையத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## சுயாதீன...

தெரிவிக்கையில்-

நான் நாட்டின் தலைவர். நாட்டுக்கும் அரசுக்கும் அபகீர்த்தி ஏற்பட ஒருபோதும் இடமளியேன். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் புதிதாகக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட தரப்பினர் தங்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அது அவர்களின் கருத்துச் சுதந்திரம். அதில் நான் தலையிடமாட்டேன். எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன். அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப் படவுள்ளது. இந்த இரு குழுக்களின் விசாரணை அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதில் ஒளிவுமறைவு எதுவும் இருக்காது.

இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து அரசுக்கு எதிராக எதிரணிகள் அரசியல் செய்கின்றன. எந்த நடவடிக்கையாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது.

அன்று சர்வதேச விசாரணைக்கு எதிராகக் கோஷம் எழுப்பிய ஒருசில தரப்பினர், இன்று சர்வதேச விசாரணை வேண்டுமெனக் கோருவது வேடிக்கையாகவுள்ளது. எந்த விசாரணை நடந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் - என்றார். (அ)

## முருகன்...

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

லண்டனில் வசிக்கும் மகளுடன் சேர்ந்து வாழ தனது கணவர் முருகன் விரும்புவதாகவும், கடவுச்சீட்டு பெறுவது தொடர்பாக அவர் இலங்கை தூதரகத்தைத் தொடர்புகொள்ள வேண்டியிருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அகதிகள் முகாமில் இருக்கும் அவரால் வெளிவர முடியவில்லை எனவும், ஆகையினால் முருகனை அகதிகள் முகாமிலிருந்து விடுவிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கோரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என். சேஷசாயி, மத்திய மற்றும் மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், மத்திய அரசின் அயல்நாட்டினர் பதிவு மண்டல அலுவலக அதிகாரி அருண்சக்திகுமார் பதில் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

"மத்திய வெளியுறவுத்துறை விதிகளின்படி, சிறையிலிருந்து விடுதலையாகும் வெளிநாட்டினர்களிடம் கடவுச்சீட்டு உள்ளிட்ட பயண ஆவணங்கள் இருக்கும்பட்சத்தில், அவர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

நால்வரின் கடவுச்சீட்டு உள்ளிட்ட பயண ஆவணங்களை கோரி கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவிற்கான இலங்கை துணை தூதரகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பயண ஆவணங்கள் கிடைத்தவுடன் நால்வரும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் மத்திய அரசு கூறியுள்ளது. (அ)

## சுற்றிவளை...

பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 3 பொலிஸார் குறித்த இடத்தை சுற்றிவளைப்பதற்காக சென்றுள்ளனர்.

குறித்த பொலிஸாரில் ஒருவர் காட்டுப் பகுதியில் இருந்து வெளியே வரவில்லை.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மோப்ப நாய்களின் உதவியுடன் காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அடர்ந்த காடு என்பதனால், உள்ளே என்ன நடந்தது என்பது தமக்கு தெரியவில்லையென கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழாவான நேற்று உற்சவ மூர்த்திகள் வீதியுலா வரும் காட்சி...!

படம் – லி. ஜெகன்

# 6000 இற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் 3 மாத காலத்துக்குள் யாழ்ப்பாணம் வருகை

## இந்திய துணைத் தூதரகம் கூறுகிறது

யாழ்ப்பாணம், செப். 15

கொர்டேலியா குரூஸ் கப்பல் சேவையை ஆரம்பித்து 3 மாத காலப்பகுதிக்குள் காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக இந்தியாவில் இருந்து 6000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜூன் மாதம் 16 அன்று அதன் முதல் வருகையிலிருந்து, அடுத்தடுத்த 9 பயணங்களின்போது, சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாண நகரத்தில் ஒரு மறக்க முடியாத விடுமுறை அனுபவத்தைத் பெற்றுள்ளனர்.

அதன் வளமான வரலாற்றுடன், யாழ்ப்பாணம் தென்னிந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளும் கலாச்சார பிணைப்புகளையும் அனுபவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்கரைகள் மற்றும் கோவில்களின் அற்புதமான அனுபவத்தை சுற்றுலாப் பயணி பெற்றுள்ளார்கள்.

வட மாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் மாவட்ட செயலகத்தின் உதவியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலகமும் வலி.வடக்கு பிரதேச சபையும் ஏற்பாடுகளை செய்திருந்ததுடன் வடமாகாண ஆளுநர் முயற்சிகளை ஒருங்கிணைத்தார்.

இந்த மேம்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இப்பகுதியில் உள்ள உள்ளூர் சமூகத்திற்கு உதவியுள்ளதுடன் தொழில்முனைவோருக்கு புதிய வழிகளை ஏற்படுத்தியுள்ளது என்று இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சர்வதேச...

ஒவ்வொரு தவணையும் விடுவிக்கப்பட்டதன் பின்னர் கடன் தொகையானது நான்கு சம தவணைகளாக இலங்கைக்கு வழங்கப்படுவதுடன், இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது மீளாய்வு செய்யப்படும்.

அதற்கமைய, முதல் தவணை விடுவிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பின் மூலமாக ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பிலும், நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்களுடன் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்கள் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## வல்லிபுர...

இடம்பெற்ற கொடியேற்றத் திருவிழாவில், விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று, பல சிவாச்சாரியார்கள் மந்திரம் ஓத கொடியேற்றம் இடம்பெற்றது.

கொடியேற்ற திருவிழாவில் அதிகளவான அடியார்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து 16 நாட்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் விசேட திருவிழக்களாக எதிர்வரும் 22 ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும், 23ஆம் திகதி துகில் திருவிழாவும், 24ஆம் திகதி பாம்பு திருவிழாவும், 25ஆம் திகதி திங்கட்கிழமை கம்சன் போர் திருவிழாவும், 26 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி சப்பற திருவிழாவும், 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி சமுத்திரத் தீர்த்த திருவிழாவும், 30ஆம் திகதி கேணித்தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது. (அ)

## ரணிலின்...

வெளியானவுடன், பாதுகாப்பு அமைச்சு பாய்ந்துகொண்டு, இது தொடர்பில் எந்த விசாரணையும் இல்லாமல் இந்த அறிக்கை தவறானது என ஓர் அறிவிப்பை வெளியிட்டது. ஜனாதிபதி இப்போது குழுவை நியமிப்பதாக கூறுகிறார். இந்த ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக உள்ளார். இது தவறானது என பாதுகாப்பு அமைச்சு ஒருதலைப்பட்சமான அறிவிப்பை வெளியிடுகிறது. ஒரு குழு நியமிக்கப்படும் என ஜனாதிபதி கூறுகிறார். யாரை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்? இது என்ன கேலி?."

யுத்த காலத்தில் இராணுவத் தளபதியாக பதவி வகித்த சரத் பொன்சேகா 13 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் நாட்டில் குண்டுகளை வெடிக்கச் செய்ததாக பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் இராணுவ அதிகாரிகளின் பெயர்களை குறிப்பிட்டு 2019 ஆம் ஆண்டு இந்த நாட்டில் குண்டுகள் வெடித்ததாக தெளிவாக கூறியதை நாம் பார்த்தோம். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? எதுவும் இடம்பெறவில்லை.

ஆணை இல்லாத அரசாங்கம், ஜனநாயக விரோதப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்நாட்டு மக்களுக்கு நீதி வேண்டும். இந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோதத் தன்மை அனைத்து தரப்பிலிருந்தும் அரசாங்கத்திற்கு காட்டப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் காட்டப்படும் போது தான் அரசாங்கம் இவ்வாறு செயற்படுகின்றது. இந்த ஜனநாயக விரோதப் பிரச்சாரத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என நாங்கள் அரசாங்கத்திடம் தெளிவாகச் சொல்கிறோம். அவர்களுக்கு எந்த மக்கள் ஆணையும் இல்லை- என்றார். (அ)

## சிறைச்சாலை...

உடனடியாக தடுப்பூசியை செலுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன சிறைச்சாலை ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தியுள்ளார்.

கடந்த சில வாரங்களில் கொழும்பு விளக்கமறியல் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் அம்மை நோய் பரவல் அதிகரித்துள்ளதோடு சுமார் 20 கைதிகள் மற்றும் அதிகாரிகள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம் அம்மை நோய் வெளி சமூகத்திற்கு பரவும் அபாயம் காணப்படுவதாகவும், அதிகாரிகள் மற்றும் கைதிகளுக்கு விரைவில் தடுப்பூசியை செலுத்துவது சிறைச்சாலை திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

## கிளிநொச்சி மத்திய கல்லூரியின் காணி இராணுவத்தால் விடுவிப்பு



கிளிநொச்சி, செப். 15

2009 இற்கு பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மத்தியக் கல்லூரிக்குச் சொந்தமான காணியில் ஒரு ஏக்கர் காணி நேற்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் இரத்தினபுரம் வீதி பக்கமாக இக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. காணி விடுவித்தலுக்கான ஆவணத்தை இராணுவ அதிகாரி மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# மனித எச்சங்களை மறைக்கவே பௌத்த கோவில்கள் அமைப்பு!

### செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, செப். 15

**மனித எச்சங்கள் காணப்படுவதை மறைப்பதற்காகவே பௌத்த கோவில்களை அமைத்தும், நிலங்களைக் கையகப்படுத்தியும் வருகின்றார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**



வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என தென்னிலங்கை தலைவர்கள் கோரும் நிலையில், குறிப்பாக ஒரு விடயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கொக்குதொடுவாயில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதில் முன்னாள் பெண் போராளிகளது எச்சங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என தென்னிலங்கை தலைவர்கள் குரல் கொடுக்கவேண்டும். இதற்கு அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் அதாவது கோட்டபாய ஜனாதிபதியாக இருக்கும்போதும், அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும்போதும் பல கொடுமைகளை எங்களது மக்களுக்கு இழைத்திருக்கின்றார். பல இன்னல்களையும், மனித உரிமை மீறல்களையும் அவர் செய்துள்ளார். அந்தக் குடும்பம் மற்றும் அதில் சம்மந்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளன. இப்படி ஒவ்வொரு இடத்திலும் மனித எச்சங்களைக் கண்டுபிடித்து கிடப்பில் போடும் நிலை தான் காணப்படுகிறது. ஆகவே இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தை எடுக்கவேண்டும். புத்த கோவில்கள் அமைப்பது, இராணுவம் பல இடங்களை பிடிப்பது இதற்கான காரணங்கள் எல்லாம் அவர்கள் பிடிக்கின்ற இடங்களைத் தோண்டுகின்றபோது எங்கள் மக்களின் மனித எச்சங்கள் அங்கே உள்ளன. அந்த விடயத்தை மறைப்பதற்காகவே இவை துரிதமாக நடைபெறுவதாக நான் சந்தேகப்படுகின்றேன்-என்றார். (அ)

# மதுபானசாலையை அகற்றக் கோரி உடுப்பிட்டியில் மக்கள் ஆர்ப்பாட்டம்!







யாழ்ப்பாணம், செப். 15

உடுப்பிட்டிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்களால் போராட்டமொன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

அந்த மதுபானச்சாலை அமைந்துள்ள பகுதியில் பாடசாலைகள், ஆலயம் என்பன இருப்பதனால் உடனடியாக அதனை அகற்றுமாறும், அவ்வாறு மதுபானச்சாலை அகற்றப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்போராட்டம் தொடர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. (அ-02)

# இலங்கைக்கான புதிய இந்திய தூதுவராக ஜா!



கொழும்பு, செப். 15

பெல்ஜியத்துக்கான இந்தியத் தூதுவராக பணியாற்றும் சிறீ சந்தோஷ் ஜாவை இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இந்தியா நியமித்துள்ளது.

அவர், விரைவில் தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்திய தூதுவராகப் பதவி வகித்துவரும் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான புதிய இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ சந்தோஷ் ஜா பிரஸ்ஸல்ஸுக்கான இந்திய தூதராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் 2019 ஜூலை முதல் 2020 ஜூலை வரை உஸ்பெகிஸ்தானில் இந்திய தூதராகவும் பணியாற்றினார்.

அத்துடன் 2017 ஜூலை முதல் 2019 ஜூன் வரை, அவர் வொஷிங்டன் டிசியில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தூதரகத்தின் தனிப்பட்ட அந்தஸ்துடன் துணைத் தூதராக பணியாற்றினார்.

சந்தோஷ் ஜா இலங்கைக்கான இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் 2 தமிழ் எம்.பிக்களுக்கு பிணை!

முல்லைத்தீவு, செப். 15

குருந்தூர்மலையிலுள்ள சட்டவிரோத விகாரையின் விகாராதிபதி தொடர்ந்த வழக்கில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

தமது வழிபாட்டு உரிமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக சட்டவிரோத விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சுமேத தேரர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன் உள்ளிட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாக அறிவித்தல் விடுக்கப்பட்டபோதும், கடந்த வழக்கு தவணையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. முன்னிலையானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்று நடந்த வழக்கில் அவர்கள் முன்னிலையாக சென்றபோது, அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியதாக பொலிஸார் மன்றில் அறிக்கையிட்டனர்.

கடந்த வழக்கில் முன்னிலையாகும் அறிவித்தல் தமக்கு கிடைத்திருக்கவில்லையென இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் மன்றில் தெரிவித்தனர்.

அவர்களை பிணையில் விடுவித்து முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், வழக்கு 2024 ஜனவரி 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசை;

## ஷுப்மன் கில் முதன்முதலாக 2ஆம் இடத்துக்கு முன்னேற்றம்!



டுபாய், செப். 15

ஒருநாள் கிரிக்கெட் போட்டி துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில், துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் தொடக்க வீரரான ஷுப்மன் கில் முதன் முறையாக 2ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

ஆசிய கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஷுப்மன் கில் 58 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். இதன் மூலம் ஓர் இடம் முன்னேறி 759 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தை அடைந்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸம் 863 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். (ஐ)

## இலங்கை வந்தது உலகக் கிண்ணம்



கொழும்பு, செப். 15

ஐ. சி. சி ஆடவர் கிரிக்கெட் உலகக் கிண்ணம் நேற்று இலங்கை வந்தது. இங்கு இரு நாட்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

இலங்கையின் பிரதான வர்த்தக நிலையங்களில் ஒன்றான உலக வர்த்தக நிலையத்தில் நேற்று காலை 9.00 மணிக்கு காட்சிக்கு வைக்கப்பட்டது.

இன்றைய தினம், செப்ரெம்பர் 15ஆம் திகதி இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானகாவின் பிரசன்னத்துடன் உலகக் கிண்ணம் ஊடகவியலாளர்களுக்கு காட்சிப்படுத்தப்படும்.

20 நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உலகக் கிண்ணம் இங்கிருந்து உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவுள்ள இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. (ஐ)

# நியூசிலாந்துடனான போட்டி; இங்கிலாந்து அபார வெற்றி!




லண்டன், செப். 15

நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 181 ஓட்டங்கள் வித்தியா சத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது இங்கிலாந்து அணி. இந்தப் போட்டியில் பென் ஸ்ரோக்ஸ் சதம் விளாசி இருந்தார்.

நியூசிலாந்து அணி, இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 இருபது -20 மற்றும் 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வருகிறது. இருபது - 20 தொடர் சமனில் முடிந் தது. பின்னர் தொடங்கிய ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. 2ஆவது போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இந்த சூழலில் 3ஆவது போட்டி நேற்றுமுன்தினம் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில், துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 368 ஓட்டங்கள் எடுத்தது. பென் ஸ்டோக்ஸ் 124 பந்துகளில் 182 ஓட்டங்கள் குவித்தார். மலான், 96 ஓட்டங்கள் எடுத்தார்.

369 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நியூசிலாந்து அணி விரட்டியது. 39 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி. கிளென் பிலிப்ஸ் மட்டுமே அரைச்சதம் கடந்து ஆறுதல் தந்தார்.

வோக்ஸ் மற்றும் லிவிங்ஸ்ரன் ஆகியோர் இங்கிலாந்து அணிக்காக தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தனர். ஸ்ரோக்ஸ், ஆட்ட நாயகன் விருதை வென்றார். இந்த வெற்றியின் மூலம் தொடரில் 2-1 என இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

(ஐ)

## சிமோனாவுக்கு 4 ஆண்டு தடை

லண்டன், செப். 15

ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய ரென்னிஸ் உலகின் முன்னாள் முதல் நிலை வீராங்கனை சிமோனா ஹாலெப் சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் பங்கேற்க 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிமோனா ஹாலெப். ருமேனியா நாட்டை சேர்ந்தவர். மகளிர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் 2017, 2018ல் முதலிடம் வகித்த ஹாலெப் 2018 பிரெஞ்சு ஓப்பன், 2019 விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

31 வயதான இவரிடம் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் தொடரின் போது ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. பரிசோதனையில் தடை செய்யப்பட்ட மருந்து அவரின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளில் கலந்திருந்தது உறுதியானது. இதையடுத்து கடந்த ஒக்ரோபரில் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனை எதிர்த்து ஹாலெப் மேல்முறையீடு செய்தார். இந்நிலையில் இந்த குற்றச்சாட்டை விசாரித்து வந்த சர்வதேச ரென்னிஸ் முகமை, ‘சிமோனா ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளதால், அவருக்கு 4 ஆண்டு தடை விதிக்கப்படுகிறது’ என அறிவித்துள்ளது.

இதன்படி ஒக்ரோபர் 2022 முதல் தற்காலி கமாக இடைநீக்கம் செய்யப்பட்ட ஹாலெப் 2026 ஒக்ரோபர் 6 வரை சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் விளையாட முடியாது.

(ஐ)



# விவ் ரிச்சர்ட்ஸுடன் சாதனை பட்டியலில் இணைந்தார் பென்!

லண்டன், செப். 15

நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சதம் பதிவு செய்துள்ளார் இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ். இதன் மூலம் கிரிக்கெட் ஜாம்பவான் விவ் ரிச்சர்ட்ஸ் முன்னணி வகிக்கும் சாதனை பட்டியலில் அவர் இணைந்துள்ளார்.

32 வயதான ஸ்டோக்ஸ் சுமார் 14 மாதங்களுக்கு பிறகு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் வகையில் அணிக்கு திரும்பினார். எதிர்வரும் ஒருநாள் உலகக்கிண்ணத் தொடருக்காக சகலதுறை வீரரான அவர் மீண்டும் வந்துள்ளார்.

அணிக்கு திரும்பியதும் முதல் போட்டியிலேயே அரைச்சதம் பதிவு செய்து அசத்தினார். தொடர்ந்து மூன்றாவது போட்டியில் 124 பந்துகளில் 182 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 15 பௌண்ட்ரிகள், 9 சிக்ஸர்கள் அவரது இன்னிங்ஸில் அடங்கும்.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து அணிக்காக அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் பட்டியலில் முதலிடத்தில் இப்போது அவர் உள்ளார். இதன் மூலம் கிரிக்கெட் ஜாம்பவான் விவ் ரிச்சர்ட்ஸ் உடன் சாதனை பட்டியலில் இணைந்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டில் 4ஆவது அல்லது அதற்கும் கீழான இடத்தில் களம் கண்டு அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் ஸ்டோக்ஸ் தற்போது இரண்டாவது இடத்தில் உள்ளார்.



(ஐ)

# சனாதனம் சர்ச்சை:

## தமிழ்நாட்டின் அரசியல் ஆளுமையாக உருவெடுக்கிறாரா உதயநிதி?





சனாதன தர்மம் குறித்த உதயநிதி ஸ்டாலினின் பேச்சுக்கு பா.ஜ.கவின் முக்கியத் தலைவர்கள் பதிலளித்து வரும் நிலையில், தேசிய அளவில் அவரது பெயர் அறிமுகமாகியிருப்பதோடு, கட்சியிலும் பொது வெளியிலும் அவருக்கான ஏற்புத்தன்மை கூடியிருக்கிறது.

சனாதன தர்மத்தை அழிக்க வேண்டும் என தான் பேசிய பேச்சுக்கு இவ்வளவு பெரிய எதிர்வினை வருமென உதயநிதி ஸ்டாலினே எதிர்பார்த்திருக்க மாட்டார். அப்படி குவிந்த எதிர்வினைகளை உதயநிதி ஸ்டாலின் எதிர்கொண்ட விதமும் எதிர்பாராத ஒன்றுதான்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த இடதுசாரி அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் செப்டம்பர் 1 ஆம் திகதி  சென்னை காமராஜர் அரங்கத்தில் சனாதன ஒழிப்பு மாநாடு என்ற மாநாடு நடத்தப்பட்டது.

இதில் கலந்தகொண்ட உதயநிதி ஸ்டாலின், 'இந்திய விடுதலைப் போரில் ஆர்.எஸ்.எஸ்சின் பங்களிப்பு' என்ற தலைப்பில் இருந்த கேலிச்சித்திரங்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டு பேசினார்.

'இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியமாகும்" என்று பேசினார் உதயநிதி ஸ்டாலின்.

பா.ஜ.க. இந்த விவகாரத்தை கையில் எடுக்காவிட்டால், உதயநிதியின் பேச்சை அங்கு கூடியிருந்தவர்கள் மட்டும்தான் கேட்டிருப்பார்கள். ஆனால், இந்த விவகாரத்தை பூதாகரமாக்க பா.ஜ.க. முடிவுசெய்தது.

செப்டம்பர் 2ஆம் திகதி மாலையில் உதயநிதி ஸ்டாலின் பேசிய வீடியோவை வெளியிட்ட பா.ஜ.கவின் தகவல் தொழிலநுட்பப்பிரிவு பொறுப்பாளர் அமித் மால்வியா, "இந்தியாவில் சனாதன தர்மத்தை பின்பற்றும் 80 சதவீத மக்களை ஒழிப்பதற்கு" உதயநிதி அழைப்பு விடுத்ததாக குறிப்பிட்டார்.

பெரிய அளவில் கவனிக்கப்படாத உதயநிதியின் பேச்சு, நாடு முழுவதும் பேசு பொருளாகவும் விவாதமாகவும் மாறியது இப்படித்தான்.

**சனாதன சர்ச்சை: பின்வாங்காத உதயநிதி ஸ்டாலின்**

இதற்குப் பிறகு, உதயநிதி பேசிய பேச்சின் வீடியோ காட்சிகள் வெட்டப்பட்டு சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டன. பா.ஜ.கவின் மாநிலப் பிரிவுகள், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் இதற்குக் கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்தார்கள்.

இந்தியா கூட்டணியில் உள்ள எல்லா கட்சிகளும் இது குறித்து தங்கள் நிலைப்பாட்டை விளக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள். அடுத்த நான்கைந்து நாட்களுக்கு, தொலைக்காட்சிகளில் தேசிய அளவிலான தலைப்புச் செய்தியாக, உதயநிதி சனாதனம் குறித்துப் பேசியதே இருந்தது.

ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி சேனல்களில் இரவு விவாதங்களில் உதயநிதி ஸ்டாலினின் பேச்சை வைத்தே விவாதங்கள் நடைபெற்றன.

இதற்குப் பிறகு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், உதயநிதிக்கு ஆதரவாக அறிக்கையை வெளியிட்டார். அதிலும் சனாதனத்திற்கு எதிர்ப்பு என்ற உதயநிதியின் நிலைப்பாட்டை ஆதரித்துக் கருத்துகளைத் தெரிவித்திருந்தார்.

உதயநிதி ஸ்டாலினின் பேச்சை வைத்து, இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தும் முயற்சிகளையும் பா.ஜ.க. மேற்கொண்டது.

இதையடுத்து, காங்கிரஸ், திருணமூல் காங்கிரஸ் ஆகியவை இது குறித்து தங்கள் பார்வையை தெளிவுபடுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டன. உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சாமியார் உதயநிதியின் தலைக்கு 10 கோடி ரூபாய் விலை வைத்தார்.

பொதுவாக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துகள், சர்ச்சையாகும்போது தான் சொன்னது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதாகவும் தான் அந்த அர்த்தத்தில் பேசவில்லையென்றும் விளக்கமளிப்பது வழக்கம். ஆனால், உதயநிதி அந்த உத்தியை நாடவில்லை.

இந்த சர்ச்சையை உதயநிதி ஸ்டாலின் பின்வாங்காமல் எதிர்கொண்டார். சனாதன தர்மம் குறித்துத் தான் பேசியதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், இந்து மதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும் என்ற பொருளிலேயே தான் பேசியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அடுத்த இரண்டு நாட்களுக்கு ஊடகங்கள் அவரைத் துரத்தித் துரத்திக் கேட்டபோதும், இதே பதிலையே அவர் திரும்பத் திரும்பச் சொன்னார்.

சனாதனம் குறித்த பேச்சு சர்ச்சையான பிறகு, அந்தப் பேச்சில் உறுதியாக நின்றது அவரை எதிர்காலத் தலைவராகக் கருதுபவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்கிறார் மூத்த பத்திரிகையாளரான ப்ரியன்.

"சனாதனம் குறித்த மாநாடு தி.மு.கவால் நடத்தப்பட்டதுமில்லை. அவருக்காக திட்டமிடப்பட்டதுமில்லை. த.மு.எ.க.ச. நடத்திய மாநாட்டில் அவர் தன் கருத்தைப் பேசிவிட்டு வந்திருக்கிறார். இந்த விஷயங்கள் எல்லாமே காலகாலமாக தி.க., தி.மு.க. தலைவர்களால் பேசப்பட்டவைதான்.

ஆகவே, இதனைத் திட்டமிட்டு அரங்கேற்றியதாகச் சொல்ல முடியாது. இது இயல்பாகவே நடந்த விஷயம் தான். ஆனால், அந்தப் பேச்சு சர்ச்சையான பிறகு, நான் பேசியதிலிருந்து பின்வாங்க மாட்டேன் என்று சொல்லியிருப்பதுதான் பெரிய விஷயம்.

இந்தியா கூட்டணியிலேயே பலருக்கு சிக்கல் வந்த நிலையிலும் தான் பேசியது சரி என்று நிற்பது குறிப்பிடத்தகுந்த விஷயம். அவரை எதிர்காலத் தலைவராக கருதுபவர்களுக்கு அது மிகுந்த மகிழ்ச்சியளிக்கும்" என்கிறார் ப்ரியன்.

**வேகமாக வளரும் உதயநிதி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கை**

உதயநிதி ஸ்டாலின் அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் கட்சிக்குள் பதவியளித்தபோதும் பல கடுமையான விமர்சனங்கள் கட்சிக்குள் இருந்தும் கட்சிக்கு வெளியில் இருந்தும் எழுந்தன.

அதற்குப் பிறகு, 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அவருக்கு போட்டியிட வாய்ப்பளித்தபோதும், அவருக்கு அமைச்சர் பதவியளித்தபோதும் இதேபோன்ற விமர்சனங்கள் கடுமையாக எழுந்தன.

தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின், தனது வாரிசு என்பதால் மட்டுமே உதயநிதி ஸ்டாலினை மிகத் தீவிரமாக முன்னிறுத்துவதாக இந்த விமர்சனங்கள் இருந்தன.

ஆனால், உதயநிதி ஸ்டாலின் தற்போது சனாதனம் குறித்து பேசிய பேச்சு, பா.ஜ.க. மற்றும் இந்து அமைப்பினரிடம் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தாலும் கட்சிக்குள் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

திராவிட இயக்கங்களில் உதயநிதி ஸ்டாலினை இதுவரை ஏற்காமல் இருந்தவர்களிடமும் அவருடைய இந்தப் பேச்சு ஒரு மன மாற்றத்தை ஏற்படுத்த உதவியிருக்கிறது.

மு.க. ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையோடு ஒப்பிட்டால், உதயநிதி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கை மிக வேகமானதாகவே நகர்கிறது. 14 வயதில் இருந்து தீவிரமாக அரசியலில் ஈடுபாடுகாட்டி வந்த மு.க. ஸ்டாலினுக்கு 31 வயதில்தான் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிடைத்தது.

1989ல் முதல் முறையாக எம்.எல்.ஏவான மு.க. ஸ்டாலின், 2006ஆம் ஆண்டில் தனது 53வது வயதில்தான் அமைச்சரானார். ஆனால், திரைத்துறையிலேயே தனது ஆர்வத்தைக் காட்டிய உதயநிதி ஸ்டாலின், 2018ஆம் ஆண்டில்தான் தீவிர அரசியலில் ஈடுபடப்போவதாக அறிவித்தார்.

2019 ஆண்டு நடைபெற்ற நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழகச் சட்டசபையின் 22 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களிலும் தி.மு.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்காகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் உதயநிதி.

தி.மு.க. கூட்டணி பெரும் வெற்றிபெற்ற நிலையில், 2019ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் தேதி தி.மு.கவின் இளைஞர் அணி செயலாளராகத் தேர்தெடுக்கப்பட்டார்.

மு.க. ஸ்டாலின் 15 ஆண்டுகள் பணியாற்றிப் பெற்ற பதவியை, அரசியலுக்கு வந்து ஒன்றரை ஆண்டிலேயே பெற்றார் உதயநிதி ஸ்டாலின். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, அடுத்த ஆண்டிலேயே அமைச்சராகவும் பதவியேற்றார் உதயநிதி ஸ்டாலின்.



தி.மு.க.

பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் சூழல் உருவாகியிருக்கும் நிலையில், உதயநிதி ஸ்டாலினைப் போட்டியிட வைத்து வாரிசு அரசியல் என்ற விமர்சனத்தை உருவாக்கிக் கொள்ள ஸ்டாலின் விரும்பவில்லை என்று கூறப்பட்டது. இருந்தபோதும் அவரது பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றது.

**சனாதன சர்ச்சையால் உதயநிதிக்கு லாபமா ?**

கட்சிக்கு வெளியில் இருந்தவர்கள் உதயநிதியின் இந்த வளர்ச்சியை வாரிசு அரசியல் என விமர்சித்தாலும், கட்சிக்குள் இதுபற்றி எந்த முணுமுணுப்பும் இல்லை. இந்த காலகட்டம்வரை, தந்தையின் செல்வாக்கிலேயே அரசியல் செய்பவராக உதயநிதி பார்க்கப்பட்ட நிலையில் தான், சனாதனம் குறித்த அவருடைய சமீபத்திய பேச்சு, அவரை வேறு வண்ணத்தில் பார்க்க வைத்திருக்கிறது.

இந்தியாவில் பல மாநிலக் கட்சிகளில் வாரிசுகளே ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். பா.ஜ.க. 2014ல் ஆட்சிக்கு வந்த பிறகு, கட்சியின் பிரதான கொள்கைகளில் தடுமாறிய பல மாநிலக் கட்சிகள் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றன. பல பிராந்தியக் கட்சிகள் மிகச் சிறியதாக சுருங்கிவிட்டன.

உதயநிதி ஸ்டாலின் பேசிய பல விஷயங்கள் இதற்கு முன்பும் சர்ச்சையாகியிருக்கின்றன.

2021ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி தாராபுரத்தில் நடந்த தேர்தல் பேரணியில், சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் அருண் ஜெட்லி இருவரும், பிரதமர் நரேந்திர மோடியின் 'சித்திரவதை' மற்றும் 'அழுத்தம்' காரணமாக இறந்ததாக உதயநிதி குற்றம் சாட்டிப் பேசியது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து சுஷ்மா ஸ்வராஜின் மகள் பன்சூரி ஸ்வராஜ், இந்த கருத்தை மறுத்து ட்விட்டரில் பதிவிட்டார். அருண் ஜேட்லியின் மகள் சோனாலி ஜேட்லி பக்ஷியும் இந்தக் கருத்தை மறுத்தார். இதைத் தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையம் உதயநிதிக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இந்த நோட்டீசிற்கு பதிலளித்த உதயநிதி ஸ்டாலின், பிரச்சாரத்தின் போது முழு உரையையும் தேர்தல் ஆணையம் கவனத்தில் கொள்ளத் தவறியதாகவும், ஓரிரு வரிகளை மட்டுமே தனியாக கவனித்திருப்பதாகவும் விளக்கமளித்து அந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

தாராபுரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோதி, "தி.மு.க.வின் இளவரசர் கட்சியில் மூத்தவர்களை ஓரம்கட்டிவிட்டு பதவி வாங்கிவிட்டார்" என்று உதயநிதியை விமர்சித்துப் பேசினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே,  "மோடி எத்தனை மூத்த தலைவர்களை பின்னுக்கு தள்ளிவிட்டு குஜராத் முதல்வராக பொறுப்பேற்றார் தெரியுமா?' என்று கேள்வியெழுப்பியதோடு, மேலே சொன்ன கருத்தையும் தெரிவித்தார்.

(16ம் பக்கம் பார்க்க)

# படகுகள், விமானங்கள், ஆயுதம் தாங்கிய ரயில் வண்டி: புடினை சந்திக்கும் கிம் - பயணத்தின் நோக்கம் என்ன?

வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை சந்திப்பதற்காக குண்டு துளைக்காத ரயில் மூலம் ரஷ்யாவின் துறைமுக நகரமான விளாடிவோஸ்டாக் நோக்கிச் சென்றார். ஆனால் அவரது பயண வழித்தடம் மாற்றப்பட்டதாக பின்னர் தெரியவந்தது.

பொதுவாக உலகத் தலைவர்கள் வெளிநாட்டுப் பயணத்தின் போது ரயிலைப் பயன்படுத்துவதில்லை என்றாலும், விமானத்தில் பறந்தால் எளிதில் சுட்டு வீழ்த்தப்படும் ஆபத்து இருப்பதால் கிம் ஜாங் உன் எப்போதும் ரயில் பயணத்துக்கு முன்னுரிமை அளிப்பதாக கூறப்படுகிறது.

குண்டு துளைக்காத ரயில் மூலம் பயணம் செய்யும் போது, அது எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதும் கடினம் என்பதால் அது பாதுகாப்பான பயணமாக இருக்கும் என கிம் நினைக்கிறார். இருப்பினும் சாட்டிலைட் படங்கள் மூலம் அவரது ரயில் பயணித்த பாதையை அறிய பிபிசி முயன்றது. ஆனால், அந்தப் படங்களும் கிடைக்கவில்லை.

இதற்கு முன் இப்படி ஒரு பயணத்தை அவர் மேற்கொண்ட போது, ஒரு பாதுகாப்பு ரயில் முன்னரே அந்த ரயில் பாதையில் ஆபத்து ஏதேனும் இருக்கிறதா என்பதைப் பரிசோதனை செய்வதற்காகவே சென்றதாகவும் தகவல்கள் வெளியாகின.







வட கொரிய தலைவர்கள் நீண்டகாலமாக கடைப்பிடிக்கும் பாரம்பரியத்திற்கு ஏற்ப, மெதுவாக நகரும் ரயில் வண்டியில் சுமார் 1,180 கிலோ மீட்டர் (733 மைல்கள்) பயணம் செய்ய கிம் ஜாங் உன் சுமார் 20 மணி நேரத்திற்கும் மேலாக செலவிட வேண்டியிருந்தது. சிறந்த பிரெஞ்சு ஒயின்கள் மற்றும் புதிய இரால் உணவுகளை வழங்கும் வசதியும் இந்த ரயில் வண்டியில் இருக்கிறது.

ரயில் அதன் பலத்த கவச பாதுகாப்பு காரணமாக மணிக்கு சுமார் 50 கிலோ மீட்டர் (31 மைல்) வேகத்தில் சலசலத்துச் சென்றது.

லண்டனின் அதிவேகமாகப் பயணிக்கும் ரயிலுடன் ஒப்பிடுகையில், இந்த ரயில் நான்கு மடங்கு வேகம் குறைவானது. ஜப்பானில் ஓடும் புல்லட் ரயில்கள் மணிக்கு 320 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும்.

பூமியின் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நீண்ட ரயில் பயணம், சில நேரங்களில் தொன்மையான ரயில் வலையமைப்பைக் கடந்து செல்லவேண்டியிருந்தது.

இந்த ரயிலுக்கு கொரிய மொழியில் டேயாங்கோ என்று பெயரிடப்பட்டுள்ளது, கொரிய மொழியில் அதற்கு சூரியன் என்று அர்த்தம். மேலும் வட கொரியாவை நிறுவிய கிம் இல் சுங்கின் அடையாளக் குறிப்பாகவும் இச்சொல் அறியப்படுகிறது.

இப் பயணத்தின் இறுதியாக கிம் ஜாங் உன் ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரை அடையத் திட்டமிட்டிருந்தார். ஆனால், பின்னர் அவருடைய ரயில் அந்நகரை விட்டு விலகி வடக்கு நோக்கி நகர்ந்தது. அவருடன் ராணுவ உயரதிகாரிகளும் பயணம் மேற்கொண்டிருந்தனர். ஆயுத விற்பனை குறித்த பேச்சுக்களுக்கான சாத்திய கூறுகளை பறைசாற்றியது.

ரஷ்யாவுக்கு வடகொரியா ஆயுதங்களை விற்பனை செய்வது குறித்து மேற்குலக நாடுகள் கவலைகளை வெளிப்படுத்தும் நிலையில், என்ன மாதிரியான ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வடகொரியா விற்கும் என்பதும், அதனால் உக்ரேன் மீதான போரில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதும் கேள்விக்குறியாகவே தொடர்கின்றன.

வடகொரியா தயாரிக்கும் பெரும்பாலான ஆயுதங்கள் ரஷ்யாவின் வடிவமைப்பை ஒட்டி இருப்பதால், அந்த ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யாவுக்கு எந்த விதமான சிரமங்களும் இருக்காது என்று கருதப்படுகிறது. மேலும், ஆயுதங்களைத் தயாரிப்பதில் வடகொரியாவுக்கு பெரிய அளவில் வளங்கள் இல்லாததால், இருக்கும் வளங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் முழுவதையும் ரஷ்யாவுக்கு விற்கும் நிலை இருக்காது என்றும் கருதப்படுகிறது.

இத்துடன், கிம் ஜாங் உன், தனது சொந்த நாடான வடகொரியாவின் பாதுகாப்பு குறித்தும் கவலைப்படும் நிலை உள்ளது. சொந்த பாதுகாப்புக்காகவும் குறிப்பிட்ட அளவிலான ஆயுதங்களை வைத்திருக்க வேண்டிய கட்டாயமும் அவருக்கு உள்ளது.

ரஷ்ய அதிபர் புடினுக்கு பதற்றம் ஏற்பட்டுள்ளதாலேயே இது போன்ற சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேற்குலக அரசியல் விமர்சகர்கள் கருதினாலும், உக்ரேன் மீதான போரில் வடகொரியாவின் ஆயுதங்களால் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றே எண்ணுகின்றனர்.

இருப்பினும், வடகொரியாவின் ஆயுதங்களை ரஷ்யாவுக்கு விற்கவேண்டும் என அதிபர் புதின், கிம் ஜாங் உன்னை வலியுறுத்துவதாக அமெரிக்கா கூறுகிறது.

வடகொரியாவுக்கு எதிராக உலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்திருப்பதால் நாடு முழுவதும் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்ற நிலையில், ஆயுத உதவிக்குப் பதிலாக உணவுப் பொருட்கள் மற்றும் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்ப உதவியை வடகொரியாவுக்கு ரஷ்யா அளித்து உதவ வேண்டும் என கிம் ஜாங் உன் எதிர்பார்க்கிறார் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ரஷ்யாவின் தூரகிழக்கு பகுதியில் உள்ள விளாடிவோஸ்டாக் நகருக்கு அதிபர் புடின் தற்போது வந்துள்ளார்.



வடகொரிய எல்லையிலிருந்து இந்நகரம் சுமார் 200 கிலோ மீட்டர் (125 மைல்) தொலைவில் உள்ளது.

நான்காண்டுகளில் வடகொரிய அதிபர் கிம் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணமாக இது அமைந்துள்ளது.

இதற்கு முன் கடந்த 2019ஆம் ஆண்டு வியட்நாமில் அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்புடன் கிம் அணு ஆயுத ஒழிப்பு குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். ஆனால் அந்த பேச்சுவார்த்தையை கிம் ஜாங் உன் பாதியிலேயே கைவிட்டார்.

2017 ஆம் ஆண்டில் வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விதித்த பொருளாதாரத் தடைகளை ரஷ்யா ஆதரித்ததன் மூலம் சீனா மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகம் ஆகிய இரண்டிற்கும் இடையில் புடின் செயல்பட்டார்.

ஆனால், இப்போது உலகின் பார்வை மாறியுள்ளது. உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்தபின் வடகொரியாவுடனான உறவுகளை ரஷ்யா பலப்படுத்தியுள்ளது.

ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகளுக்கு இடையே ஒரு நட்புறவை அமெரிக்கா உருவாக்கிய பின் வடகிழக்கு ஆசியாவின் அரசியல் நிலைப்பாட்டில் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது.

ஆனால், வடகொரியாவின் நெருங்கிய கூட்டாளியான சீனா என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

ரஷ்யாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்த வடகொரியா விரும்பினால், அதை சீனா எப்படிப் பார்க்கும் என்பதும் புதிராகவே உள்ளது.

இதற்கிடையே, உக்ரேன் போரில் பயன்படுத்த தரைப்படைத் தளவாடங்களும், ஆயுதங்களும் ரஷ்யாவிடம் போதுமான அளவுக்கு இல்லை என்பதால், அவற்றை வடகொரியாவிடமிருந்து ரஷ்யா கேட்டுப்பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆயுதங்களும், தளவாடங்களும் வடகொரியாவிடம் ஏராளமாக உள்ளன.

இந்நிலையில், இது போல் ரஷ்யாவுக்கு வடகொரியா ஆயுதங்களை வழங்குமானால், அது கடுமையான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என அமெரிக்கா ஏற்கெனவே எச்சரித்துள்ளது.



அதே நேரம், ரஷ்யாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதன் மூலம் வடகொரியாவுக்கு என்ன பலன்கள் கிடைக்கும் என்ற கேள்வி தென்கொரியாவின் முன் நிற்கும் கவலையாக உள்ளது.

ரஷ்ய அதிபர் புடினின் தடுமாற்றத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் கிம், தனது தேவைகளை அதிகரித்துக் கேட்க்கும் நிலையும் ஏற்படவாய்ப்பிருக்கிறது.

ஒருவேளை ரஷ்யாவிடமிருந்து அதிக ராணுவ உதவிகளைக் கூட அவர் கேட்கலாம். அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் போர் ஒத்திகையைப் போன்ற நடவடிக்கைகளை ஏற்கெனவே சீனாவுடன் இணைந்து வடகொரியா மேற்கொண்டு வருகிறது.

எனவே எதிர்காலத் தேவைக்கு ரஷ்யாவிடம் இருந்து அவர் ராணுவ உதவிகளை எதிர்பார்க்கும் வாய்ப்பு உள்ளது.

தற்போதைய நிலையில், உளவு பார்க்கும் செயற்கைக் கோள்களோ, அணு ஆயுதம் தாங்கிய நீர் மூழ்கிக் கப்பல்களோ வடகொரியாவிடம் இல்லாத நிலையில், அவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ரஷ்யாவிடம் வடகொரியா எதிர்பார்க்கும் நிலையையும் மறுப்பதற்கில்லை.

ஆனால், அந்த அளவுக்கு ரஷ்யாவிடம் இருந்து வடகொரியாவுக்கு உதவிகள் கிடைக்காது என தென்கொரியா நம்புகிறது. ●

# மட்டக்களப்பில் இரு மாமன்மார்களை வாளால் வெட்டிய மருமகன்கள் கைது!

*மட்டக்களப்பு, செப். 15*

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள இரு பிரதேசங்களில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இரு மனைவிமார்களின் தந்தைகளான மாமன்மாரை வாளால் வெட்டிய இருவரையும் மற்றும் துவிச்சக்கர வண்டி திருடிய இளைஞர் என 3 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதூர் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மதுபோதையில் மனைவியின் தந்தை மீது வாளால் வெட்டித் தாக்குதல் நடத்தியதையடுத்து அவர் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனையடுத்து, தாக்குதல் நடத்திய 30 வயது மருமகன் தப்பியோடி தலைமறைவான நிலையில் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாமாங்கம் பகுதியில் மதுபோதையில் மனைவியுடன் ஏற்பட்ட சண்டையின்போது மனைவியின் தந்தையை வாளால் வெட்டி நபரொருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

அதனையடுத்து, மாமனார் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மாமனாரை தாக்கிய அந்த மருமகன் தப்பியோடி தலைமறைவான நிலையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

மேலும், புளியம் தீவு அதிகாரி வீதியில் வீடு ஒன்றில் வேலி அடைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த 22 வயது இளைஞர் ஒருவர் அங்கிருந்த 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான துவிச்சக்கரவண்டி ஒன்றை திருடிச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் சிசிரிவி கமராவில் பதிவாகிய வீடியோவின் மூலம் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இந்த மூன்று வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 3 பேரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது வாள்வெட்டுத் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய மாமாங்கத்தைச் சேர்ந்தவரின் மருமகன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஏனைய இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரையுமான 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# சனாதனம் சர்ச்சை:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தருணத்திலும் உதயநிதி பேசியதும் அதனைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளும் நாடு முழுவதும் செய்தியாயின. உதயநிதி தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய பேச்சுகள் சிலவும் இதற்கு முன்பாக பரவலாக கவனிக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படாமலேயே இருப்பது குறித்து ஒரு செங்கலை கையில் வைத்தபடி உதயநிதி ஸ்டாலின் பேசிய பேச்சு மிகவும் பிரபலமான காட்சியாக சமூக வலைதளங்களில் வலம்வந்தது.

பொதுவாக உதயநிதி ஸ்டாலின் ஊடகங்களிடம் பேசும்போது, மிகச் சரளமாக மனதில் பட்டதைப் பேசுவதைப் போன்ற தொனி இருக்கிறது. குறிப்பாக, சனாதம் குறித்த அவரது பேச்சு குறித்து ஊடகத்தினர் மீண்டும் மீண்டும் அவரிடம் கேள்வியெழுப்பியபோது, அதற்கு முன்பாக பெரியார், மு.கருணாநிதி, திருமாவளவன், ஆ. ராசா என யாரெல்லாம் சனாதனம் குறித்துப் பேசியிருக்கிறார்கள் என்று நீண்ட பட்டியலைக் கூறி தான் பேசியதை நியாயப்படுத்தியது கவனிக்கத்தக்கதாக இருந்தது.

ஆனால், பெரியார், மு. கருணாநிதி, ஆ. ராசா, திருமாவளவன் ஆகியோருக்கும் உதயநிதி ஸ்டாலினுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருந்தது. மேலே சொன்ன தலைவர்கள் அனைவரது அரசியலின் அடிப்படையாகவும் இந்து மத எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு என்பதே இருந்தது. ஏதோ ஒரு நாள் அதைப் பேசிவிட்டு அவர்கள் சென்றுவிடவில்லை.

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி, தொடர்ந்து தனது பேச்சிலும் எழுத்திலும் சனாதன எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு, ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்குவது போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவந்தார்.

ஆ. ராசாவும் திருமாவளவனும் தொடர்ச்சியாக சனாதனம் குறித்த எதிர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். உதயநிதி ஸ்டாலினிடம் இதுபோன்ற தொடர்ச்சி இருக்குமா என்ற கேள்வி நீடிக்கிறது. ●

# நாமல் எம்.பி. மீதான வழக்கு ஒத்திவைப்பு!

*கொழும்பு, செப். 15*

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மீள அழைப்பதற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்றறு உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியபோது சட்டவிரோதமாக சம்பாதித்த 15 மில்லியன் ரூபாய் நிதியை ஹெலோகோப் நிறுவனத்தில் முதலீடு செய்தமை ஊடாக பண மோசடி செய்ததாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணை தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மீண்டும் அழைத்து உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிவிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.




